








இவ்விடத்தில்

விளம்பரம் செய்ய எம்மை

அழையுங்கள்

416 – 752 – 1524
















29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1534 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday August 29, 2025

## கனடா – பிக்கரிங் நகரின் அருள்ஜோதி சிவாலய பரிபாலன சபையினர் நடத்திய சிறப்பான "ஆன்மீகப் பெருவிழா"

24-08-2025 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை கனடா- பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் அருள்ஜோதி சிவாலயத்தின் பரிபாலன சபையினர் நடத்திய
"ஆன்மீகப் பெருவிழா"வில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிறார்களுக்காக நடத்தப்பெற்ற பண்ணிசைப் போட்டி மற்றும் தேவார மனனப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக கனடா வாழ்" பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினராக
அழைக்கப்பெற்றிருந்தார்.
மேற்படி பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் அருள்ஜோதி சிவாலயத்தின் பரிபாலன சபையினர் நடத்திய "ஆன்மீகப் பெருவிழா"வில் முக்கிய
நிகழ்வாக தமிழ்க் கனடியர்களில் 15 பேருக்கு சிறப்பு விருதுகள் ஒவ்வொரு பெயரில் வழங்கப்பெற்றன.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)




## தமிழ்நாட்டின் பிரபல பேச்சாளரும் பன்முகக் கலைஞருமான "இசைக்கவி" ரமணன் நாளை 30.08.2025 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோவில்...



நாளை 30ம் திகதி சனிக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகின்றது. முற்றிலும் இலவசம். பயனுள்ள கவிஞர் கண்ணதாசன் பற்றிய உரை மற்றும் கனடா வாழ் தமிழ்க் கவிஞர்கள் இணைந்து வழங்கும் சந்தமும் சொல்வீச்சும் நிறைந்த கவியரங்கம் ஆகியவற்றை சுவைத்துச் செல்லலாம். 416 732 1608 அனுமதி இலவசம்

## றொறன்ரோவில் SANDY MASTER




பிரபல நடனக் கலைஞரும் திரைப்படங்களுக்கான நடனங்களை பயிற்றுவிப்பதில் புகழ்பெற்றவரும் அண்மைக்காலமாக திரைப்படங்களில் நடித்து நன்கு அறியப்பெற்ற நடிகராகத் திகழ்பவருமான SANDY MASTER ஸ்காபுறோவில் சீனக் கலாச்சார மண்டபத்தில் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறவுள்ள நடனப் போட்டி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். விபரங்களுக்கு உள்ளே விளம்பரத்தைப் பார்க்கவும். ரிக்கட்டுக்களுக்கு:- 416 728 4071 அல்லது 437 2340 6717










உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160


உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையும்
Centre for Youth Empowerment and Community Services அமைப்பும் இணைந்து நடத்தும்
C.Y.E.C.S
'உங்களோடு இசைக்கவி ரமணன்'
மொழியும் கலையும் கவிதையும் சங்கமிக்கும் ஒரு மாலைப் பொழுது
இடம்: பைரவி நுண்கலைக் கூடம் - கலையரங்கம்
27 Casebridge Ct. Unit 5, Scarborough, ON M1B 4Y4
காலம்: 30-08-2025 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு
விழாத் தலைவர்: லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள்
(தலைவர் - உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் கனடாக் கிளை)
வாழ்த்துரைகள்:
கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள்
(காப்பாளர். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க்ம் - அகிலச் செயற்குழு)
சிவா கணபதிப்பிள்ளை அவர்கள்
(அகிலச் செயற்குழுத் தலைவர் - உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்)
கவியரங்கம்: தமிழர் பண்பாட்டைப் பேணி.
தரணியில் உயர்ந்திடுவோம்!
தலைமை: பாவலர் இராஜ்மீரா இராசையா
பங்குபெறும் கவிஞர்கள்: 1) பாவலர் சி. சண்முகராஜா
2) பாவலர் அகணி சுரேஷ்
3) பாவலர் பவானி தர்மகுலசிங்கம்
4) பாவலர் சயந்தன் பசுபதி
5) பாவலர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை
"கவிஞர் கண்ணதாசனும் நாமும்"
உரையும் இசையும் கலந்து வழங்குபவர்
'இசைக்கவி ரமணன்'
"இசைக்கவி ரமணன்" அவர்களை சபையோருக்கு அறிமுகம் செய்தல்:
திரு. சிவன் இளங்கோ
(சமூகச் செயற்பாட்டாளர். ரொறன்ரோ பல்கலைக் கழக "தமிழ் இருக்கை" மற்றும்
ஹாவர்ட் பல்கலைக் கழக தமிழ் இருக்கை ஆகியவற்றை நிறுவுவதில் கனடாவில் முக்கிய பங்கு வகித்தவர்)
அனைவரும் வருக! அனுமதி இலவசம்!
மேலதிக விபரங்களுக்கு: (416) 732-1608 | (416) 899-6044 | (647) 891-7725

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# ரணிலின் கைதுக்கான காரணமாக வேறொன்றை வெளிப்படுத்தியிருந்தால் அநுரவின் அரசாங்கத்தை அனைத்து மக்களும் கொண்டாடியிருப்பார்களா?

இலங்கையின் வரலாற்றில் அரசியலுக்குள் புகுவதற்கு முன்பதாக "செல்வ"ப் பிள்ளையாகவும் "செல்ல"ப் பிள்ளையாகவும் விளங்கிய ரணில் விக்கிரமசிங்க அரசியலுக்குள் புகுந்த பின்னரும் எத்தனை வருடங்கள் அவர் வகித்த ஒவ்வொரு பதவியினூடாக அனுபவித்த சலுகைகள் மற்றும் சுகபோகங்கள் என அனைத்தையும் அரசியல் பதவிகள் ஊடாக பெற்றுக்கொண்ட அதிஸ்டசாலிகளில் ஒருவராக அவர் கணிக்கப்படுகின்றார்.

அவரது அதிஸ்டமோ அன்றி அவர் மேற்கொண்ட முயற்சிகளின் பலனோ அவரை பதவிகள் தேடி வந்தன. இயல்பாகவே திமிர். கபடம். மேல்தட்டு வர்க்கத்தினருக்கு உள்ள இயல்பான சுபாவம் ஆகியவற்றைக் கொண்ட ரணிலுக்கு இலங்கையில் ஆட்சி அதிகாரம் செல்வமும் செல்வாக்கும் கொண்டவர்களிடம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக மனதில் குடிகொண்டிருந்தது. ஆனால் சில தடவைகள் எவருமே எதிர்பார்த்திராக வகையில் சாதாரண குடும்பங்களில் பிறந்த அரசியல்வாதிகள் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவி வகித்த காலப்பகுதியில் அவர் தோல்வியால் சஞ்சலம் அடைந்திருந்த சந்தர்ப்பங்கள் பல இருந்தாலும் ரணில் "துவண்டு" விடாமல் தனக்கே இயல்பான முறையில் காய்களை நகர்த்திக் கொண்டிருந்ததனால், வெற்றிகளையும் ஈட்டிக் கொண்டிருந்தார்.

இலங்கையின் வடக்கும் கிழக்கும் தனிப்பிரதேசதமாக பிரிக்கப்பட்டு "தமிழீழமோ அன்றி சுயாட்சி அதிகாரங்கள் கொண்ட ஒரு அலகாகவோ வருவதை எவ்வாறு தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் விரும்பாமல் இருந்தார்களோ அவ்வாறான போக்கு கொண்ட தமிழ் பேசும் அரசியல்வாதிகளை அணைத்துக் கொண்டு தன் அரசியல் பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தவர் ரணில் என்பது வெளிப்படையாகத் தெரிந்த உண்மை. இதன் காரணமாகவே சுமந்திரன் அவர்களின் நெருங்கிய தோழனாகவும் இன்று வரை அவர் திகழ்ந்து வருகின்றார். இதைப்போன்றே, தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்கள் மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் விடுதலை அமைப்பை நிறுவி மறைந்த றோகண விஜேவீர தலைமையில் ஆட்சியைக் கைப்பற்ற போராட்டங்களை நடத்தியதை முதலாளித்துவ போக்கு கொண்ட தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ளாமல் அந்த அமைப்பைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களை கொன்றழித்தார்கள். அவ்வாறான தன்னினப் படுகொலைகளைச் செய்தவர்களில் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் ரணில் விக்கிரமசிங்கவுமே முக்கிய கொலையா-ளிகள் என்று கணிக்கப்படுகின்றார்கள்.

சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் 1971ம் ஆண்டு தொடக்கம் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டதைப் போன்று பின்னர் வந்த காலத்தில் அதாவது 1984ம் ஆண்டளவில் பட்டலந்த என்னும் இடத்தில் நிறுவிய வதை முகாமில் அடைக்கப்படடும் சித்திரவதை செய்யப்பட்டும் கொல்லப்பட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரின் கொலைகளுக்கு முக்கிய காரணகர்த்தாக்களாக விளங்கிய பிரேமதாச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தொடர்ச்சியாக கவனித்து வந்த விடயம் இலங்கையில் மாறி மாறி ஆட்சிபீடம் யார் கைகளுக்குச் சென்றால் புரட்சிகர அல்லது விடுதலைப் போக்கு கொண்டவர்களின் கைகளுக்கு போய்விடக் கூடாது என்பதுதான்.!

இவ்வாறான நிலையில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த எவரும் இல்லாத ஆட்சியொன்றை இலங்கை மக்கள் 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தேர்ந்தெடுத்தார்கள். இந்த ஆட்சி மலர்ந்ததை அடித்தட்டு சிங்கள மக்கள் மாத்திரமல்ல, தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்களும் வரவேற்று மகிழ்ந்தார்கள். அதே அரசாங்கத்தில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றக் கதிரை அலங்கரித்த அழகை தமிழ் மக்கள் கொண்டாடினார்கள்.

ஆனால் மறுபக்கத்தில் ரணில் விக்கிரமசிங்க "வீட்டுக்கு" அனுப்பப்பட்டாலும் அவர் மீது நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய சாதகமான குற்றச்சாட்டுகளை அநுரவின் அரசாங்கம் பரீசீலித்து வந்தது. இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை அரசாங்க நிதியை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்து சிறையில் அடைத்தது அநுரவின் அரசாங்கம்.!

ஆனால் அநுர அரசாங்கம் எதிர்பார்த்ததிலும் பார்க்க ரணிலின் கைதையும் அவர் தண்டிக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ளாத சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, தமிழ் பேசும் அரசியல்வாதிகளும் இஸ்லாமியர்களும் எதிர்த்துக் குரல் எழுப்பினார்கள். இவ்வாறான நேரத்தில் இலங்கையில் உள்ள உழைக்கும் மக்கள் மற்றும் மத்திய தர வர்த்தகத்தினர் ஆகிய குரலற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

ஆனால் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு ஊழல் செய்தவர்கள் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்து அவர்களுக்கு சட்ட ரீதியான பலமாக விளங்கிய சட்டத்தரணிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ரணில் அவர்களுக்கு பிணை வழங்கப்பட வேண்டும் என நீதிமன்ற வளாகங்களில் கூடி நின்று ரணிலுக்காக குரல் எழுப்பினார்கள். இந்த நேரத்தில் ரணில் என்பவர் ஒரு மோசமான குற்றவாளி என்பதை நன்கு தெரிந்து கொண்ட அநுர அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்த அந்த மக்கள் மௌனமாகவே இருந்தார்கள்.

இவ்வாறான நிலையில்தான் சில பகுதிகளிலிருந்து குரலற்றவர்களின் குரல்கள் எழுந்தன. ரணிலை குற்றவாளியாக தீர்மானிக்கக் எத்தனையோ சாதகமான குற்றச்சாட்டுக்கள் இருக்க. அநுர அரசாங்கம் ஏன் வேறு மோசமான காரணங்களை அல்லது மத்திய வங்கி மோசடி ஊழல்களை அல்லது பட்டலந்த வதை முகாம் படுகொலைகளை குற்றச்சாட்டுக்களாக முன்வைக்கவில்லை என்பதே அவ்வாறான கேள்விகள் என்று நம் காதுகளையும் எட்டிய உரையாடல்களை இவ்வாரத்தின் கதிரோட்டத்தில் ஒரு கேள்வியாக முன்வைக்கின்றோம்.!

இணுவில் திருவூர் ஒன்றியம்-கனடா
கனடா வாழ் இணுவில் மக்களின்
**வருடாந்த ஒன்றுகூடல் – 2025**

காலம்: 30-08-2025 (சனிக்கிழமை)
இடம்: L'amoreaux Park
100 Silver Spring Blvd, Scarborough
(Birchmount Rd / McNicoll Ave)
நேரம்: காலை 10.00 மணி

சகல வயதினர்க்குமான விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்புகள் மற்றும் கயிறிழுவைப் போட்டிகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றது. அறுசுவையோடு விதம் விதமான தாயக உணவுகள் என உண்டு சுவைத்து ஊர் உறவுகளோடு உறவாடி மகிழக் கனடா வாழ் இணுவில் மக்களை இவ்வொன்று கூடலுக்குக் குடும்பத்தோடு வந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:
சாந்தி சர்வானந்தா: (647) 200-2177
மு.கிருபாகரன்: (416) 389-7399
பரராசசேகரன் கஜஜெயன்: (416) 732-5898

**Help Wanted**
Workers needed for renovation company. Must have experience in one of the following:
- Drywall Installation - Painting
- Hardwood Installation - Bathroom Reno - Kitchen Reno
Call - Siva
416-706-8160 or 416-893-3216

**ஸ்காபுறோவில் வீடு வாடகைக்கு உண்டு**
பெலாமி-எக்லிங்டன் (Bellamy-Eglinton) சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றின் மேல் தளத்தில் 3 அறைகளும் ஒரு குளியல் அறை மற்றும் 2 வாகன தரிக்கும் இடங்கள் (Parking) ஆகியவற்றுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு. வாடகை 2600 டாலர்கள் மற்றும் ஏனைய கட்டணங்களின் (Bills) அரைவாசியை செலுத்த வேண்டும்.
தொடர்புகளுக்கு:- ரவி 416-988-0965

**Job Vacancies - Markham Development Project**
Applications are invited for following Job Vacancies at a Development Project in Markham immediately.
* Sales & Administration * Helpers/ Labourers
Successful Applicants should be required to work at Markham Project office.
Contact: 437.601.0450 or Email: sales@gritdevelopments.com

# மண்டைதீவு படுகொலையின் 35 ஆவது நினைவு நாள் அனுஸ்டிப்பு – நூற்றுக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலிப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்



மண்டைதீவு படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவுனாள் இன்று உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

35 வருடங்களுககு முன்னர் இதே தினத்தன்று இராணுவத்தால் மண்டைதீவில் நடத்தப்பட்ட படுகொலைச் சாட்சி நினைவிடத்தில் இன்றையதினம் தீவக மக்கள் ஒன்றுகூடி தமது உறவுகளை நினைவுகூரி சுடரேற்றி மலர் தூவி அஞ்சலித்தனர்.

படுகொலை செய்யப்பட உறவுகளின் வாழும் உறவுகளில் இருவர் முதன்மைச் சுடரேற்றி நினைவிடத்துக்கு மலர்மாலை அணிவித்து ஆரம்பமான அஞ்சலி நிகழ்வில் ஏற்பாட்டாளர் பிரகலாதன், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.அசோக்குமர் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மக்களும் கலந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தி அஞ்சலி செலுத்தினர்.

26.08.1990 ஆம் ஆண்டு தீவக பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்ததுடன் மேலும் பலர் கொல்லப்படும் இருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் குறிப்பிட்ட சில கிணறுகளில் இருப்பதாகவும் அதற்கான வாழும் சாட்சியங்கள் இருப்பதாகவும் பல்வேறு தரப்பினர் கூறிவரும் நிலையில் கடந்த 20 ஆம் திகதி வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் பிரகலாதன் குறித்த புதைகுழியை அகழ்ந்து உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இன்னிலையில் குறித்த படுகொலைக்கு சாட்சியான இடமாக கூறப்படும் சுமார் 50 இக்கும் மேற்பட்ட உடலங்கள் இருப்பதாக கூறப்படும் கிணறு மக்களால் அடையாளம் காணப்பட்ட அவ்விடம் நினைவு கூரப்பட்டு வந்தது.

இதேநேரம் குறித்த சம்பவம் குறித்து வழும் சாட்சியாக இருக்கும் படுகொலைசெய்யப்பட்ட இருவரது தாயாரும் சகோதரியும் அன்றைய நாள் வடுக்களையும் வேதனைகளையும் சாட்சியாக ஊடகங்களுக்கு கருத்து கூறியிருந்தனர்.

இதன்போது கணவனையும் சகிதரனையும் இழந்த தாயார் கூறுகையில் - 1990.08.25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இந்த படுகொலையும் காணாமலாக்கலும் இராணுவத்தால் அரங்கேற்றப்பட்டது.

இதில் தனது கணவரும் சகோதரனும் கைதுசெய்யப்படு இராணுவத்தால் என்கண் முன்னேகைது செய்யப்படு எனது உறவினர் ஒருவரது வீடின் பின் பகுதயில் வைத்து கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கினர். அதன் பின்னர் சுட்டுக் கொன்றனர். இந்த கோர சம்பவத்துக்கு நான் கண்கண்ட சாட்சி.

அத்துடன் எனது சகோதரனின் மனைவியையும் இன்னொரு இளம் பெண்ணையும் கைதுசெய்யது ஒரு வீட்டுக்குள் கொண்டு சென்றனர்.

அவர்கள் இருவரையும் இராணுவத்தினத் பாலியல் பலாத்காரம் செய்து சீரழித்ததுடன் உள்ளாடைகளைக் கூட கையில் கொடுத்து அனுப்பிய கொடுமையையும் நான் நேரில் கண்டு அனுபவித்தேன்.

அதேபோன்று சுற்றுவட்டத்தில் இவ்வாறு கொல்லப்பட்ட பல உடலங்களை சிலவற்றை அவ்வூர் மக்களைக்கொண்டு சேகரித்து கிணறுகளில் போட்டு மூடினர்.

அவ்வாறு புதைக்கப்பட்ட கிணறுகளில் ஒன்றுதான் இன்று நினைவு கூரப்படும் கிணறு.

இந்த கிணறு போன்று இன்னும் சில இருக்கின்றன என கண்ணீர் மல்க கூறினர்.





# சுண்டிக்குளத்தில் கரைவலை மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞனின் படகு விபத்தில் சிக்கி உயிரிழப்பு!



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, சுண்டிகுளம் பகுதியில் படகு விபத்தில் இளைஞன் ஒருவர் 26-08-2025 அன்று உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வடமராட்சிக் கிழக்கு சுண்டிக்குள பகுதியில் உடப்பு பகுதியைச் சேர்ந்த மைனர் சம்மாட்டியின் கரைவலை வாடியில் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை கரவலை மீன்பிடி நடவடிக்கை இடம்பெற்றது.

அண்மைய நாட்களாக நாட்டின் சில பகுதிகளில் காணப்படும் அசாதாரண காலநிலை வடமராட்சி கிழக்கு சுண்டிக்குள கடல் பகுதியிலும் நிலவியது.

இதன் போது மீன்படி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் கடலின் அலையில் இருந்து படகை விடுவிப்பதற்கு முயன்ற போது அதே படகு அலையில் சிக்குண்டு குறித்த இளைஞன் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் உடப்பு பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய சின்னத்தம்பி சசிதரன் என்று தெரிவிக்கப்படுகிறது.

சடலம் நித்தியவெட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மருதங்கேணி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்!



நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையை படிப்படியாக எவ்வளவு விரைவாக இயக்க முடியுமோ அவ்வளவு விரைவாக இயக்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும், இதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

மருத்துவமனையின் செயற்பாடுகளை இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் 25ம் திகதி அனறு திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், மேற்படி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டு இன்னமும் செயற்படாத நிலையில் அங்குள்ள உபகரணங்கள் வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக வதந்திகள் பரப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். அவ்வாறான எந்தவொரு நகர்வும் முன்னெடுக்கப்படாத நிலையில் இவ்வாறான கதைகள் பரப்பப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் வடக்கில் அமைக்கப்பட்ட 4 மருத்துவமனைகளில் மாங்குளம் மருத்துவமனைக்கு மாத்திரம் ஆளணிக்குரிய அனுமதி கிடைக்கப்பெற்றதாகவும், ஏனைய மூன்று மருத்துவமனைகளுக்கும் ஆளணி அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என ஆளுநர் குறிப்பிட்டார். ஆளணி அனுமதி கிடைக்காத போதும் இருக்கின்ற வளங்களை வைத்துக்கொண்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் திறக்கப்பட்ட மருத்துவ அலகு சிறப்பாக இயங்குவதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார். அந்த மருத்துவ அலகு சிறப்பாக இயங்குவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

அதேபோல கிளிநொச்சி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையையும் இயக்கத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட ஆளுநர், அங்குள்ள மனிதவளப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரண, கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளர் பிரபாத், மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

ஆளணி பற்றாக்குறையுடன் இயங்குவதிலுள்ள சிரமங்கள் மற்றும் எவ்வாறு படிப்படியாக இதனை இயங்கச் செய்ய முடியும் என்பது தொடர்பில் தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்தனர்.

இறுதியாக கருத்துத் தெரிவித்த ஆளுநர், எவ்வளவு விரைவாக இயக்க முடியுமோ அவ்வளவு விரைவாக இயக்க வேண்டும் என்று பணித்ததுடன், படிப்படியாக இயக்குவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# இலங்கையின் ஏழாவது மனித புதைகுழியான சம்பூர் கடற்கரையை சுற்றியுள்ள பகுதியை "பீசு ஸ்கேன் செய்ய" நீதிமன்றம் உத்தரவு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



போர் முடிவடைந்ததிலிருந்து இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஏழாவது மனித புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்தில் மேலும் மனித எச்சங்கள் உள்ளனவா? என்பதைத் தீர்மானிக்க நீதிமன்றம் குறித்த பிரதேசத்தை ஸ்கேன் பரிசோதனைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் கடற்கரையில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான வழக்கு 26ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.எம். நஸ்லீம், அந்த இடத்தில் தரை ஊடுருவும் ரேடார் (GPR) பரிசோதனைக்கான உத்தேச பாதீடு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"இன்றைய தினம் சட்ட வைத்திய அதிகாரி, தொல்லியல் திணைக்களம், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், சம்பூர் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரின் கையொப்பமிடப்பட்ட உத்தேச பாதீடு ஒன்று இன்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தில் மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா என்பதை தொல்லியல் திணைக்களத்திடம் காணப்படும் GPR ஸ்கேன் இயந்திரத்தின் ஊடாக ஸ்கேன் செய்வதற்காக குறித்த பாதீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது."

மாகாண மேல் நீதிமன்றம் முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு அனுமதி வழங்கிய பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

"குறித்த உத்தேச பாதீடானது மூதூர் நீதிமன்ற கட்டளையுடன் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அனுமதி கிடைத்ததும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

இந்த வழக்கு செப்டெம்பர் 2, 2025 அன்று மீண்டும் மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.


மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம் அரச காணி எனவும், அங்கு முன்னர் ஒரு மயானம் இருந்தமைக்கான எவ்வித ஆதாரமும் இல்லை எனவும் மூதூர் பிரதேச செயலாளர், பிரதேச சபையின் செயலாளர் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கூட்டாக ஓகஸ்ட் 6 மூதூர் நீதவான் எச்.எம். தஸ்னீம் பௌசானிடம் தெரிவித்தனர்.

சம்பூர் கடற்கரையில் எலும்புகள் கண்டெடுக்கப்பட்ட மூன்று பேரின் மரணங்கள் இயற்கை காரணங்களால் ஏற்பட்டவை என தீர்மானிப்பது கடினம் என சட்ட வைத்திய அதிகாரி நிர்மால் பொறுக்கம நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்தார்.

அவர்களின் வயது குறித்தும் அறிக்கையில் தெரிவித்திருந்த அவர், அவர்களில் இருவரின் எலும்புகள் ஒன்றாகக் காணப்பட்டதால், இயற்கையான காரணங்களால்தான் மரணங்கள் நிகழ்ந்தனவா என்பதை தீர்மானிப்பது கடினம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் கடற்கரையில் கண்ணிவெடி அகழ்வை நடத்திய பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மெக் (MAG) நிறுவனம் ஜூலை 20ஆம் திகதி ஒரு மண்டை ஓடு உள்ளிட்ட எலும்புகளைக் கண்டுபிடித்தது.

57 பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரியூட்டியும் கொலை செய்யப்பட்ட, இலங்கை இராணுவத்தின் மீது குற்றம் சாட்டப்படும், ஜூலை 7, 1990 சம்பூர் படுகொலையின் நினைவாக பாதிக்கப்பட்ட கிராம மக்களால் அமைக்கப்பட்ட நினைவுச்சின்னத்திலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் ஆலய வருடாந்த தேரோட்டம்

fdfuhrh rutzd;;

ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் என அழகைகப்படும் மட்டக்களப்பு பல்லாயிக்கணக்கான பக்தர்கள் புடைசூழ 22ம் திகதியன்று வெள்ளிக்கிழமை மாலை ஆலய பிரதமகுரு தலைமையில் இடம்பெற்றது.



கடந்த 14ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த திருவிழா இன்று மாலை தேர்திருவிழா ஆலைய பிரதம குருக்கள் தலைமையில் முருக்கப் பொருமானுக்கு விசேட பூஜை வழிபாட்டுடன் தமிழ் மொழியில் வேபரானயங்கள் ஓதப்பட்டு முருகப் பெருமான் சிறப்பு தேரில் அருள்பாளித்தார்.

மாலை 3 மணிக்கு தேர் திருவிழா ஆரம்பித்தது இதில் தேரின் வடம்பிடிக்க ஆண்கள் ஒருபகுதியாகவும் பெண்கள் ஒரு பகுதியாகவும் வடமிளுக்க தேரோட்டம் இடம்பெற்றது இந்த தேரோடத்தின் போது இலங்கையில் முதல் முதலாக வசந்தி கௌதவம் இங்கு ஆடப்பட்டு வெளிவீதியில் நடனங்கள் ஆடப்பட்டு தோரோட்டம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.





ஆகம முறைப்பட அமைக்கப்பட்ட முருகப் பெருமானுகக்கு பூஜைவழிபாடு செய்யும் ஒரேஒரு ஆலயம் மகா துறவி ஓங்காரந்த சரஸ்வதியபல் உருவாக்கப்பட்டு ஒரு சித்தர் பீடமாக அருள்பாளித்து வருகின்றது குறிப்பிடத்தக்கது.



# இரா.சாணக்கியனுக்கு ரணில் 800 மில்லியன் வழங்க கச்சேரி 400 மில்லியன் என்கிறது மிகுதி 400 மில்லியன் எங்கே?

### மோசடி விசாரணை வேண்டும் என்கிறார் ஈ.பி.டி.பி அன்ரனிசில் ராஜ்குமார்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு அபிவிருத்திக்காக 400 மில்லியன் ஒதுக்கினார் ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா 800 மில்லியன் வழங்கப்பட்டதாக தெரிவிக்கின்றார். எனவே மிகுதி 400 மில்லியன் ரூபா எங்கே? என்ன நடந்தது? இந்த மோசடி தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, ஜனாதிபதி விசாரணை குழு ஒன்றை நியமித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அன்ரனிசில் ராஜ்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வெஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் 27ம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட அன்ரனிசில் ராஜ்குமார் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் கச்சேரியில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் என் மீது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அப்பட்டமான பொய் குற்றச்சாட்டு ஒன்றை வைத்திருந்தார் எனவே அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் என் மீது சுமத்தப்பட்ட பொய் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என இந்த ஊடக சந்திப்பு ஏற்படுத்தினேன்.

கிழக்கு மாகாணத்தில் தேசத்துக்கு மகுடம் என்ற திட்டத்தின் கீழ் யு.என்.டி.பி நிறுவனத்தால் மீனவர்களுக்காக 9 மண்ணெண்ணெய் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டது இருந்தபோதும் தற்போது களுவங்கேணி, பாலமீன்மடு ஆகிய இரண்டு நிலையங்கள் மாத்திரம் இயங்கிவருகின்றது.

ஏனைய அனைத்து மண்ணெண்ணெய் நிரப்பு நிலையங்கள் துருப்பிடித்து இயங்க முடியாது பாலடைந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது இந்த கடற்தொழில் நீரியல் வளத் துறைக்கு சொந்தமான இந்த இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மீனவர் சங்கங்களிடம் இருந்து நான் 5 வருட குத்தகை அடிப்படையில் சட்ட ரீதியாக பெற்றுக் கொண்டேன்.

அதேவேளை 2021 நாடாளுமன்றத்தில் அப்போது கடல் தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் களுவங்கேணியில் மண்ணெண்னைய் நிரப்பு நிலையம் மூடப்பட்டுள்ளது இதை மீனவர்களுடைய பயனுக்காக திறக்கமுடியாதா என ஒரு கேள்வி இரா.சாணக்கியன் எழுப்பியிருந்தார். அது தொடர்பாக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட அமைச்சர் அதை இயக்க யாரும் முன்வராததால் அதை கப்பல் போக்குவரத்து திணைக்களத்துக்கு வழங்கி அதை இயக்க வைக்குமாறு கூறியிருந்தார்.

இதனை ஊடகவாயிலாக அறிந்த நான் சம்மந்தப்பட்ட மீனவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அதனை திருத்தியமைத்து இயக்குவேன் என கூறி 5 வருட குத்தகைக்கு பெற்றுக் கொண்டேன் அதில் தற்போது 4 வருடம் முடிவுற்றுள்ளதுடன் இன்னும் ஒருவருடம் இருக்கின்றது. இந்த நிலையில் இரா.சாணக்கியன் டக்ளஸின் செல்வாக்கினால் எனக்கு வழங்கப்பட்டதாக பொய் குற்றச்சாட்டை என் மீது சுமத்தியுள்ளார்.

இரா. சாணக்கியனின் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் கல்லாற்றில் தேசத்துக்கு மகுடத்தின் திட்டத்தில் வந்த எரிபொருள் நிரப்பு நிலையம் இன்று வரை திறக்க முடியாது துருப்பிடித்து கட்டிடத்தின் கதவுகள் கழற்றப்பட்டு பாழடைந்துள்ளதை அவர் திறக்க வைத்திருக்கலாம் அதை செய்ய முடியாத இவர் தற்போது இயங்கி கொண்டிருக்கும் மீனவர்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும். இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் எவ்வாறு ஏனையவை இயங்காது இருப்பது போல இயங்காது தடுப்பதற்கு அல்லது அவருடைய பினாமிகளுக்கு அதை கைப்பற்றி வழங்குவதற்கு அரச அதிகாரிகளை தவறான முறையில் வழிநடத்தி பாரிய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அபிவிருத்திக்காக அவருக்கு 400 மில்லியன் ரூபா பணத்தை ஒதுக்கினார் அதில் எருவில் கோடைமடு குளத்தில் பதிவு செய்யப்படாத விளையாட்டு மைதானத்துக்கு 50 இலச்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முடிவுற்றதாக காட்டி பணத்தை பெற்றுள்ளனர்.

இதேபோன்று ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் இதுவரை பூர்த்திசெய்யப்படாமல் பூரணப்படுத்தி உள்ளது என நிதி வழங்கப்பட்டது இதை அறிந்து நான் இது மக்களின் வரிப்பணம் இதனை வீண் விரயம் செய்ய விடமுடியாது நான் இந்த நாட்டின் ஒரு குடிமகன் என்ற ரீதியில் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமை எனவே தகவல் அறியும் சட்டத்தின் மூலம் மக்களுடைய வரிப்பணம் வீணடிக்கப்பட்டு பாரிய மோசடி இடம் பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தேர்தல் திணைக்களத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தேன்.

இதனால் அவர் என்னுடன் காழ்ப்புணர்ச்சி கொள்வதற்கான காரணமாக என்னை பழிவாங்கும் நோக்கத்துடன் என் மீது பொய் குற்றச்சாட்டு சுமத்தி திறக்காமல் இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறக்க முடியாது திறந்திருப்பதை மூடுவதற்கு முயற்சி செய்து என்னை பழி வாங்குகிறார் என எனக்கு நன்றாக தெரியும் இது தொடர்பாக கடற்தொழில் அமைச்சர் மற்றும் பணிப்பாளருக்கு எழுத்து மூல அறிக்கை சமர்ப்பித்துள்ளேன்.

எனவே உங்களுடைய இந்த பூச்சாண்டி, அடாவடி அரசியலை விட்டுவிட்டு தமிழரசு கட்சி கடந்த காலத்தில் எவ்வாறு இருந்தது அவ்வாறு இருக்க வேண்டும் என்பது எங்களது நோக்கம் அதைவிடுத்து ஆயுத குழுக்கள் போன்று அடாவடியில் ஈடுபட்டு வருகிறார்கள் இதனை வன்மையாக கண்டிக்கின்றேன். அதேவேளை கடந்த காலத்தில் ஆயுத குழுக்கள் எவ்வாறு இருந்ததே அவ்வாறு தமிழரசு கட்சியை இன்று ஆயுத குழு பாணியில் அழைத்துச் செல்கிறீர்கள்? என்ற சந்தேகம் எழுகின்றது.

தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக இரா சாணக்கியனுக்கு 400 மில்லியன் ரூபா ரணில் ஒதுக்கியதாக மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம் எழுத்து மூலம் அறிக்கை வந்துள்ளது ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா ராமநாதன் நாடாளுமன்றத்தில் ரணில் 800 மில்லியன் ரூபாவை இரா. சாணக்கியனுக்கு வழங்கியுள்ளதாக அதற்கான ஆதாரம் உள்ளதாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே மிகுதி 400 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது? எங்கே அந்த பணம்?

அதேவேளை அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட 400 மில்லியன் ரூபாவில் 3 கோடியே 99 இலச்சம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தகல் அறியும் சட்டத்தில் தெரிவிக்கின்றது. எது எவ்வாறக இருந்தாலும் மாவட்டத்தில் நாளை கஞ்சி குடிப்பதற்கு நமக்கு கஞ்சிக்காவது வழி கிடைக்குமா என ஆயிரக்கணக்கான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஏங்கி தவிக்கின்றனர்.

ஆனால் அபிவிருத்திக்கு ஒதுக்கிய பணத்தை அவர்களின் வாழ்வாதாரத்துக்காக அல்லது அத்தியாவசிய தேவைகளுக்காக பயன்படுத்தாது தேவையற்ற முறையில் முறையற்ற விதத்தில் இந்த பணத்தை உங்கள் ஊரிலே மாத்திரம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை செய்துள்ளார்.

அபிவிருத்திக்கு வந்த பணத்தில் 3 கோடியே 99 லட்சத்து திருப்பி அனுப்பினால் எந்த அரசாங்கமும் மாவட்டத்துக்கு எந்த நிதியும் ஒதுக்காது அதை சுட்டிக் காட்டினால் நாங்கள் குற்றவாளியா? அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை சரியாக பயன்படுத்த தெரியாது விட்ட தவறை சுட்டிக்காட்டிய என்னை பழிதீர்க்க எனது குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்து வேறு ஒருவருக்கு வழங்க பகிரங்க கேள்வி மனு செய்யுமாறு அரச அதிகாரிகளை அச்சுறுத்தி தவறான முறையில் வழிநடத்துகிறார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

# உள்ளூராட்சிக்கான அதிகாரப்பகிர்வு அபிவிருத்திக்குத்தேவை என்பதை உணர்ந்து சபைகளை அரசு வலுப்படுத்தவேண்டும்



## உள்ளூராட்சி அமைச்சரிடம் தவிசாளர் நிரோஷ் எடுத்துரைப்பு

கிளின் சிறிலங்கா திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் மீறப்படுகின்றன. அதிகாரப்பகிர்வு மற்றும் மனித உரிமைகள் பேணப்படுவது கூட அபிவிருத்தியின் ஓர் அங்கமாகும். எனவே அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் வாயிலாக மீறக்கூடாது. மாறாக அபிவிருத்தியைக் காத்திரமாக்க வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பொது நிர்வாக மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபேயரட்ண மற்றும் பிரதி அமைச்சர் பி. ரூவான் செனரத் ஆளுநர் என்.வேதநாயகன் உள்ளிட்டவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானிகளை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையர் அலுவலக கேடபோர் கூடத்தில் 27ம் திகதியடன்று புதன்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடினர். இச் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், உள்ளூராட்சி மன்றங்களிள் ஆளணி வெற்றிடம் நாட்டின் பிறபாகங்களைக் காட்டிலும் வடக்கு மாகாணத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆளணி வெற்றிடத்தினை நாட்டின் ஏனைய மாகாணங்கள் தேர்தல் காலத்திற்கு முன்னரான விசேட சுற்று நிருபங்களுக்கு அமைய நியமித்துக்கொண்ட போதும் எமது மாகாணத்தில் வெளிவாரிப்பணியாளர்களாக சனசமூக நிலையங்கள் ஊடாக நியமிக்கப்பட்டிருந்தமையினால் துரதிஸ்டவசமாக எம்மால் இந் நியமனங்களுள் பயனடைய முடியவில்லை. தசாப்தக் கனக்கில் பல தொழிலாளிகள் நியமனத்திற்காக ஏங்குகின்றார்கள். இவ்விடயத்தில் அமைச்சர் அவர்கள் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத்தாக்கல் செய்து பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியமனத்தினை விரைவு படுத்தக்கோருகின்றோம். தொழிலாளர்களின் பிரச்சினை என்ற வகையில் இந்த அரசாங்கம் கூடிய கவனம் எடுக்கும் என நம்புகின்றோம்.

மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளத்தில் எதிர்வரும் ஆண்டில் இருந்து தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் செலுத்திவரும் இருபது விகித பணத்தினை நாற்பது விகிதமாக அதிகரிக்க வேண்டிய அறிவுறுத்தல் உள்ளது. இதனை எமது சபைகள் தாங்கிக்கொள்வதில் பாரிய பிரச்சினை உள்ளது. எனவே அரசின் இக் கொள்கையில் மாற்றத்தினைக் கோருகின்றோம். அதேவேளை சபைகளின் வருமானம் பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப் படுகையில் சபையின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட அளவீட்டு முறைமை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. காரணம் சபைகளின் நிலப்பரப்பு மற்றும் சனத்தொகை என்பன வேறுபட்டுள்ளன. ஆகவே சபைகளின் வருமானம் கணக்கிடப்படும் போது நிலப்பரப்பு மற்றும் சனத்தொகைக்குமான சூத்திரம் பின்பற்றப்படவேண்டும். அதுவே சரியான புள்ளிவிபரத்தரவுகளை வழங்கும். அபிவிருத்திக்கு அது அவசியமாகும்.

மேலும் உள்ளூராட்சி சேவை மூடப்பட்ட சேவையாக அமைகளில் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களால் மக்களுக்கு ஆற்றப்படும் அரச சேவையினை வினைத்திறனாக்க முடியும். உள்ளூராட்சி மன்ற தாய்ச் சட்டங்கள், நியமத்துணைவிதிகள், துணைவிதிகளை கற்றுள்ள மற்றும் அனுபவப்பட்ட உத்தியோகத்தர் குழாம் மீளவும் உள்ளூராட்சி சேவைக்குள் ஈடுபடுத்தப்படுவது சிறந்தது. அவர்களை எழுந்தமானமாக மத்திய அரசாங்கத்தின் திணைக்களங்களுக்கு இடமாற்றக் கொள்கைகளுக்குள்ளாக இடமாற்றுவதைத் தடைசெய்யும் தேசிய கொள்கை நாட்டில் ஏற்படுத்தப்படவேண்டும். புதிது புதிதாக உத்தியோகத்தர்கள் திணைக்களங்களில் இருந்து இடமாற்றலாகி வருவது மத்திய அரசாங்கத்தின் ஓர் திணைக்களம் போலவே உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குகின்றது.

அத்துடன் இப்போது மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இவ் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைப்பரப்பில் வருகின்ற விடயங்களுக்கான செயற்பாடுகளுக்கு ஏனைய அமைச்சுக்களுக்கு நிதியை ஒதுக்கி அதன் வாயிலாக மத்திய அரசாங்கத்தின் நிர்வாக அலுவலகமான பிரதேச செயலக வாயிலாக நிதிகள் ஒதுக்கப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களின் பகிரப்பட்ட அதிகாரங்களை மீறப்படாது மாகாண சபை முறைமை ஊடாக உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நிதியை ஒதுக்க வேண்டும். கிள்னி சிறிலங்கா திட்டத்தின் வாயிலாக உள்ளூராட்சி மன்றங்கள் முகாமை செய்யும் பஸ்தரிப்பிடங்களின் முடிவுகளைக் கூட மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தினர் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.


# Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar

Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca

E-mail : thana7@gmail.com

Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772

Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# கைதுசெய்யப்பட்ட ரணில்: விளைவுகள்?



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணை எடுத்த ஒருவருக்கு இப்பொழுது பிணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற பொருள்பட ஓர் அரசியல் செயற்பாட்டாளர் முகநூலில் பதிந்திருந்தார். ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டார் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் உண்டு. ரணில் விக்கிரமசிங்க ஒரு லிபரல் என்று கூறப்படுவதை பெரும்பாலான தமிழர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவர் லிபரல் முகமூடி அணிந்த ஒரு இனவாதி என்றுதான் தமிழர்கள் நம்புகிறார்கள். அவரை அன்ரன் பாலசிங்கம் நரி என்று சொன்னார். பாலசிங்கம் சொன்ன பல விடயங்களை தமிழர்கள் மறந்து விட்டார்கள். ஆனால் ரணிலைப்பற்றி அவர் சொன்னதை மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

இலங்கைத் தீவின் முன்னாள் ஜனாதிபதிகளில் யாருமே எந்த ஒரு குற்றச்சாட்டுக்காகவும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்ததில்லை. ரணில்தான் அவ்வாறு முதன்முதலாக கைது செய்யப்பட்டு இருக்கிறார். இதுவரை காலமும் முன்னாள் ஜனாதிபதிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதில்லை என்ற மரபை உடைத்து தேசிய மக்கள் கட்சி அரசாங்கம் ஒரு புதிய மரபை உருவாக்குமா?

தமிழ்த் தேசிய அரசியல் நோக்கு நிலையில் இருந்து தேசிய மக்கள் சக்தி மீது விமர்சனங்கள் ஆயிரம் உண்டு. ஆனால் சிங்கள மக்களைப் பொறுத்தவரையிலும் அது சில மாற்றங்களைக் காட்டுகிறது என்பதைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டு தானாக வேண்டும். குறிப்பாக ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை பொறுத்தவரை இதுவரை 63க்கும் குறையாதவர்கள் கைது செய்யப்பட்டு விட்டார்கள். இவர்களில் அரசியல்வாதிகள், உயர் நிர்வாகிகள், போலீஸ் அதிகாரிகள் படைப்பிரதானிகள் போன்றவர்கள் அடங்கும்.

இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தியானது திருப்பிச் செல்ல முடியாத ஒரு இடத்துக்கு வந்திருக்கிறது என்று சட்டத்தரணி சாலிய பீரிஸ் கூறுகிறார். அவர் ஆங்கிலத்தில் ”ஊசழளளைபெ வாந சுரடிைஉழடெ” என்ற சொற்றொடரைப் பாவித்துள்ளார். அது ஜூலியஸ் சீசரின் துணிகரமான, ஆனால் திரும்பி வர முடியாத ஒரு யுத்த நகர்வைக் குறிக்கும் சொற்றொடர். திரும்பி வர முடியாத ஒரு இடத்துக்கு என்பி பி முன்நகர்ந்திருக்கிறது என்று பொருள்.

அதில் உண்மை உண்டு. ஏனென்றால் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்த பின் அதிலிருந்து பின் வாங்கினால், இப்பொழுது சீண்டப்பட்டிருக்கும், தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் சிங்கள மேட்டுக்குடி பழிவாங்கும் உணர்ச்சியோடு அனுரமீது பாயும். எனவே என்பிபி திரும்பிப் போக முடியாது. அப்படிப் போனால் அது எல்லாவிதத்திலும் தோல்வி. அதனால் ரணிலை தொடர்ந்து அடுத்தடுத்து பெரிய தலைகளை கைது செய்வதன்மூலம் சிங்கள பௌத்த மேட்டுக்குடியை ஒருவித அச்சச் சூழலில், தற்காப்பு நிலையில் வைத்திருக்கலாம்.

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதோடு சிங்கள பௌத்த உயர் குழாம் ஒன்று திரண்டு விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் பின்வருமாறு கூறினார்... “கட்சி பேதமின்றி நாம் ஒன்றிணைக வேண்டும். இவை அனைத்தும் இணைந்து இறுதியில் எமது வீட்டுக் கதவைத் தட்டும்.நாம் தற்பொழுது ஒன்றிணைந்து எதிர்கொள்ளவில்லை என்றால் எதிர்காலத்தில் ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்”.

இது சிங்கள பௌத்த உயர் குழாத்தின் அச்சத்தை பிரதிபலிக்கும் கருத்தாகும். ரணிலைக் கைது செய்வதன்மூலம் சிங்கள பௌத்த உயர் குழாமும் எதிர்க்கட்சிகளும் உ'ார் ஆகிவிட்டன. இந்த அரசாங்கம் இப்படியே தொடர்ந்து முன் சென்றால் தங்கள் எல்லாரிலும் கைவைக்கக் கூடும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் எதிர்க்கட்சிகள் மீண்டும் ஒன்று திரளும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இது ஒரு ஒத்திகைதான். இப்போதுள்ள சிங்கள பௌத்த உயர் குழாத்தில் ஒப்பீட்டளவில் மென் இலக்காக ரணில்தான் காணப்படுகிறார். அவருடைய தாய்க் கட்சி உடைந்து விட்டது. அவர் ஒரு பலமான அணியாக இல்லை. உள்நாட்டில் அவர் அனேகமாக பலவீனமான ஒரு தலைவர்தான். ஏனென்றால் அவர் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் தீவிரப் போக்கை பிரதிபலிபவர் அல்ல. ராஜபக்சக்களைப் போல சிங்களபௌத்த பொது உளவியலைக் கவரக்கூடிய ஆடை அணிகலங்களோடு தோன்றுபவரும் அல்ல. தண்டுசமத்தாக, மிடுக்காக நிமிர்ந்து காட்சி தருபவர் அல்ல. தன்னை ஜனவசியம் மிக்க ஒரு தலைவராகக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதற்காக சிங்கள பௌத்த இனவாதத்தின் தீவிர நிலைகளுக்கு தலைமை தாங்குபவர் அல்ல. அல்லது சிங்கள பௌத்த கூட்டு உளவியலைக் கவரும் விதத்தில் ஆடை அணிகலன்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துபவர் அல்ல. மாறாக அவர் தன் அரசியல் வாழ்க்கை முழுவதிலும் மேற்கத்திய உடுப்புகளோடுதான் காணப்பட்டார். மேற்கத்திய அறிவுவாதத்தின் வாரிசாகவும் தன்னை காட்டிக் கொள்ள முற்பட்டார். ராஜபக்சக்களை போலன்றி ஏன் அனுரவை போலன்றி எல்லா பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்திருக்கக் கூடிய தந்திரசாலியாகவும் கெட்டிக்காரராகவும் அவர் காணப்பட்டார்.

ஆனால் அவருடைய கெட்டித்தனங்கள் சிங்கள மக்களைக் கவரவில்லை. சிங்கள மக்களைக் கவர்வதற்கு ராஜபக்சக்களிடம் நிறைய இருந்தது. ரணிலிடம் குறைவாகவே இருந்தது. அதனால்தான் அவர் அநேகமாக தேர்தல்களில் தோற்கடிக்கப்படும் ஒரு தலைவராக காணப்பட்டார். எனினும் உள்நாட்டில் அவர் பலவீனமாக தலைவராக இருந்த பொழுதும், அனைத்துலக அளவில் அவர் ஒரு பலமான ஒரு பிம்பத்தை கட்டியெழுப்பி வைத்திருந்தார். மேற்கத்திய தலைநகரங்களிலும் சரி ஐநா, ஐஎம்எ.்.ப் போன்ற உலகப் பொது நிறுவனங்களிலும் சரி அவருக்கு கவர்ச்சி அதிகம்.

இவ்வாறு உள்நாட்டில் கவர்ச்சி குறைந்த ஒருவரை ஒரு மென் இலக்கை முதலில் கைது செய்ததன்மூலம் அனுர ஒத்திகை ஒன்றை செய்திருக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். இது எதிர்காலத்தில் நிகழப்போகும் கைது நடவடிக்கைகளுக்கான ஒத்திகை. அதேசமயம், ஏற்கனவே இளைய ராஜபக்சவாகிய சஷீந்திர ராஜபக்ச கைது செய்யப்பட்டிருக்கிறார். எனினும் மூத்த ராஜபக்சங்களில் கையை வைத்தால் எதிர்ப்பு பலமாக இருக்கலாம் என்று தேசிய மக்கள் சக்தி சிந்திக்கின்றது. ராஜபக்ஷக்களில் கை வைத்தால் அது இனவாதத்தை மேலும் முன்னிலைக்கு கொண்டு வரும். அதனால்தான் பரீட்ச்சார்த்தமாக ரணிலில் கை வைத்திருக்கிறார்கள்.

அது இன்னொரு வகையில் பழைய பகையை, கணக்கைத் தீர்ப்பது. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் பிமல் ரட்டநாயக்க கூறினார் ரணிலை 40 ஆண்டுகளுக்கு முன்னரே கைது செய்து இருந்திருக்க வேண்டும் என்று. அது 40 ஆண்டுகளுக்கு முந்திய ஜேவிபியின் கணக்கு. ஜேவிபியின் இரண்டாவது போராட்டத்தை கொடூரமாக நசுக்கியது யுஎன்பி. அப்பொழுது ரணில் அரசாங்கத்தில் ஒரு பிரதானி.
எனவே அந்தக் கணக்கைத் தீர்க்க வேண்டிய தேவை ஜேவிபிக்கு இருந்தது.

ஆனால் இந்த இடத்தில் மேலும் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஜேவிபிக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக அவர் கைது செய்யப்படவில்லை. அது ஒரு குற்றச்சாட்டாக இல்லை. பிமல் ரட்டநாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்துச் சுட்டிக் காட்டிய, தமிழ் மக்களுக்கு எதிரான நூலக எதிர்ப்பு போன்ற குற்றங்களுக்காகவும் அவர் கைது செய்யப்படவில்லை. அரச வளங்களை தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தியதற்காகத்தான் அவர் மீது வழக்கு. போர்க்குற்ற வழக்கு அல்ல.

அவரைக் கைது செய்வதன் மூலம் எதிர்காலத்தில் அவரைப் போன்ற முன்னாள் ஜனாதிபதிகளும் உட்பட ஏனையவர்களைக் கைது செய்வதற்கான ஒரு பரிசோதனையை என்பிபி செய்து பார்த்தது என்றும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அந்த பரிசோதனைக்குள் இதுவரை போர் குற்றங்கள் அடங்கவில்லை.

உள்நாட்டில் ரணில் தேர்தல் கவர்ச்சி குறைந்த தலைவராக இருந்த காரணத்தால் அவரை ஒரு மென் இலக்கு என்று தீர்மானித்து கைது செய்திருக்கலாம். ஆனால் இப்பொழுது எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டுவிட்டன. சிங்கள பௌத்த உயர்குழாம் மீண்டும் ஒன்று திரளுகிறது. “தேசிய மக்கள் சக்தியை வீட்டுக்கு அனுப்புவதற்கான பலமான கூட்டணியை உருவாக்குவதற்கு அரசாங்கமே அடிக்கல் நாட்டியிருக்கிறது” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார்.

சாலிய பீரிஸ் கூறியதுபோல திரும்பிவர முடியாத ஒரு இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வந்திருக்கின்றது. எனவே அவர்கள் தொடர்ந்தும் துணிச்சலாக ரிஸ்க் எடுத்து ஊழலுக்கு எதிராக முன்னுரினால் மட்டும்தான் தமையும் காத்துக் கொள்ளலாம் எதிர்த்தரப்பையும் பலவீனப்படுத்தலாம்.

அதேசமயம் இந்த கைது நடவடிக்கையால் தமிழ் தரப்புக்கு ஏற்பட்டிருக்கும் சாதக பாதக விளைவுகள் என்ன?

ரணில் கைது செய்யப்பட்ட காலம் எதுவென்று பார்க்க வேண்டும். அடுத்த ஜெனீவா கூட்டத்துடருக்கு சில கிழமைகளுக்கு முன் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஒரு முன்னாள் ஜனாதிபதியைக் கைது செய்யும் அளவுக்கு இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதி பலமாக உள்ளது என்று அனைத்துலக அரங்கில் எடுத்துக் கூறுவதற்கு அது அனுரவுக்கு உதவும்.

ரணில் மேற்கு நாடுகளுக்கும் ஐநாவுக்கும் அதிகம் இசைவானவர். இலங்கைத் தீவில் மேற்கு நாடுகளின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட இரண்டு சமாதான முயற்சிகளில் அவர்தான் அரச பங்காளி. முதலாவது சமாதான முயற்சி நோர்வையின் அனுசரணையோடு கூடிய சமாதான முயற்சிகள். இரண்டாவது சமாதான முயற்சி, 2015ஆம் ஆண்டு ஐநா மனித உரிமைகள்
பேரவையில் நிறைவேற்றப்பட்ட பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம். இந்த இரண்டிலும் ரணில்தான் சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தினார். அவருடைய காலத்தில்தான் மேற்கின் நிகழ்ச்சி நிரலுக்கு இசைவாக சமாதான முயற்சிகள் அல்லது நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே மேற்கு நாடுகளுக்கும் ஐநாவுக்கும் வாலாயமான ஒரு கருவியாகக் காணப்பட்ட ஒரு தலைவரை சில நாட்கள் தூக்கிச் சிறையில் போட்டதன்மூலம் அனுர அரசு உள்நாட்டு நீதி தொடர்பில் ஒரு புதிய தோற்றப்பாட்டை கட்டி எழுப்ப முற்படுகின்றது.

ஏற்கனவே ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து திரும்பிச் சென்ற பொழுது உள்நாட்டு நிதியை வெளிநாட்டு உதவிகளோடு பலப்படுத்துவது தொடர்பாக கருத்து தெரிவித்திருந்தார். அதன்பின் அவர் வெளியிட்ட திருத்தப்படாத அறிக்கையிலும் அதே கருத்தை பிரதிபலித்திருந்தார். ஐநா புதிய அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்கலாம் என்று தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு ரணில் கைது அரசாங்கத்துக்கு உதவும். இது தமிழ் தரப்பின் நிலைமையை ஐநாவில் மேலும் பலவீனப்படுத்தும்.

ஐநாவின் பொறுப்புக்கூறல் செய்முறையின் பங்காளியாக இருந்த ஒருவரே கைது செய்யப்படும் அளவுக்கு இலங்கைத் தீவின் உள்நாட்டு நீதி பலமாக உள்ளது என்று அரசாங்கம் ஜெனிவாவில் கூறப்போகிறது.

எனவே கூட்டி கழித்துப் பார்த்தால் ரணிலைக் கைது செய்தமை என்பது சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை பலப்படுத்துகிறது. உலக அளவிலும் உள்நாட்டு
நீதியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு அது உதவக் கூடும். இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்று திரளும் சிங்கள
பௌத்த உயர் குழாம் எப்படிப்பட்ட சவால்களை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப் போகிறது என்பதுதான் நாட்டின் எதிர்காலத்தையும் தேசிய மக்கள் சக்தியின் எதிர்காலத்தையும் ஐநாவில் தமிழர் விவகாரம் நீர்த்துப் போவதற்கான வாய்ப்புகளையும் தீர்மானிக்கும்.

# கிழக்கில் தமிழர் இனழிப்பின் ஆரம்ப புள்ளி!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## அத்திப்பட்டிபோல அழிக்கப்பட்டடு காணாமல் போன அம்பாறை வயலூர் கிராமம் 40 வருட நிறைவு



அரசுடன் முதல் முதல் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் வயலூர் கிராம தமிழ் மக்களை சிங்கள பேரினவாத அரசின் படையினர் நடத்திய தமிழ் இன அழிப்பின் ஆரம்ப மையப்புள்ளி என்பதுடன் இது ஒரு கிராமத்தையே கொடுமை!

அம்பாறை மாவட்டத்தில் பல தமிழ் கிராமங்கள் சிங்கள ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் வாழ்ந்த இடமே இல்லாமல் போன வரிசையிலும் தமிழீழ போராட்ட வரலாற்றில் முதல் முதல் 1985 ஓகஸ்ட் 24ம் திகதி விடுதலை இயக்கங்களுக்கும் சிங்கள பேரினவாத அரசுக்கும் இடையிலான சமாதான திம்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அப்பாவி விவசாயிகள் 40 பேர் படுகொலை செய்யப்பட்டு கிராமமே அழிக்கப்பட்டு வெளி உலகிற்கு வெளிவராது போன வரிசையிலும் தமிழர் இன அழிப்பின் ஆரம்ப புள்ளி வயலூர் கிராமம். என்பதுடன் இந்த இனஅழிப்பின் 40 வருட நினைவு தினம் 24-8-2005 ஞாயிற்றுக்கிழமை ஆகும்.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிலுள்ள சாகமத்திலிருந்து தெற்கு பக்கமாக 8 மையில் தொலைவில் வயலூர் கிராமம் 1972ம் ஆண்டு காணியற்ற வறிய மக்கள் 200 குடும்பங்களை குடியமர்த்தப்பட்ட ஒரு கொலனியாக இருந்தது.

அரசாங்கம் அக்கால பகுதியில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மரவள்ளிக் கிழங்கும், குரக்கனும் சாப்பிடுமாறும் உணவு விடுதிகளில் சோறு சமைக்க கூடாது என கேட்டுக் கொண்ட காலப்பகுதியில் இக்கிராமம் உணவு மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை அபிவிருத்திக்காக அதிமுக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் குடியமர்தப்பட்டது.

இக் கிராமத்தை அடைவதற்கு சாகமத்திலிருந்து காட்டு வழிபாதை மட்டும் உள்ளதுடன் நான்கு சக்கர உழவு இந்திரங்கள் மாட்டுவண்டிகள் என்பவை விவசாயத்துக்கான உள்ளீடு மற்றும் உற்பத்திகளை ஏற்றிச் செல்வதற்கு உபயோகிக்கப்பட்டன அதேவேளை ஏழைகள் வழமையாக இத்தூரத்தை நடந்து சென்று வந்தனர்.

இவர்கள் தடிகள், களிமண், ஒலை புல்லுகளினால் தமது இருப்பிடங்களை அமைத்து குடியமர்தப்பட்ட இவர்களுக்கு சுத்தமான குடிநீர், கடைகள் என்பன இருக்கவில்லை இம் மக்கள் மலோரியா மற்றும் நீரிலான தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டதுடன் தமது வைத்திய சேவையை பூர்த்தி செய்ய 10 மையிலுக்கு அப்பால் அக்கரைப்பற்றுக்கு செல்ல வேண்டியிருந்தது.

இருந்தபோதும் தமது விவசாயமான சோளம், குரக்கன், மரவள்ளி போன்ற பயிர்களை பயிர் தொடர்ந்து செய்துவந்ததுடன் அவர்களது ஆடுகள், கோழிகளை நரிகள், சிறுத்தைகள், திருடிச் சென்ற அதேவேளை காட்டுப்பன்றிகள் பயிர்களையும் நாசம் செய்தன ஆயினும் அவர்கள் இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியில் மகிழ்சியாக தொடர்ந்து வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய ஒரு சமூகம் தான் இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டது இந்த யுத்த நிறுத்தம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் சகோதரர் எச்.டபிள்யூ. ஜயவர்தனா தலைமையிலான அரசாங்க குழுவும். (ரி.யு.எல்.எப்) தமிழர் விடுதலைக் கூட்டணியிலான விடுதலை இயக்கங்களான தமிழ்ழீழ விடுதலைப்புலிகள், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ். ரெலோ ஆகிய 5 இயக்கங்களுக்கும் இடையிலான திம்புவில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த சமயம் இராணுவப் படைகள் வகை தொகையின்றி அப்பாவி தமிழ் மக்களை கொன்று குவித்தன.

1985ம் ஆண்டு 8ம் மாதம் 24ம் திகதி அதிகாலைவேளை வயலூர் மக்கள் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது இத்தாக்குதலில் 40 பேர் படுகொலை செய்யப்பட்டன இவ்வயலூரின் தாக்குதலில் விதவையாக்கப்பட்ட பெயர்குடிப்பிடாத 5 பிள்ளை களுக்கு தாயாரானவர் அவருக்கு 3 பெண்பிள்ளைகள் அவர் கூறும் பொழுது இராணுவத்தினரின் வெறியாட்டத்தில் எனது கணவர் கொல்லப்பட்டார்.

நாங்கள் வயலூரில் கிழங்கு, மாப்பொருட்களான மரக்கறிவகைகள். பழமரங்கள் செய்கைபண்ணி வாழ்ந்துவந்தோம் ஆனால் எங்களுக்கு சுத்தமான குடிநீர், கடைகள், பாடசாலை, வைத்தியசாலை இருக்கவில்லை 1985.8.24 திகதி அதிகாலை 6 மணியிருக்கும் பொழுது நான் அடுக்களையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தேன் திடீரென ஒரு தொகை மனிதர்கள் துப்பாகியுடன் எமது குடிசைகளை சுற்றி நின்று கொண்டிருப்பதை அவதானித்தேன்.

நான் பீதியடைந்து வந்தவர்களைக் கண்டு மிகப்பயத்தில் நடுங்கினேன் நான் பதற்றப் பட்டிருப்பதை கண்டுகொண்ட அவர்கள் என்னை நெருங்கி சிங்கள மொழியில் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டனர் எனக்கு அவை விளங்கவில்லை அப்பொழுது எனது கணவர் வந்ததால் நட்புணர்வு சைகைகளை காட்டி நாங்கள் தண்ணீர் கொண்டுவரும் வாளியை எடுத்துக் கொண்டு தங்களுடன் வருமாறு கேட்டனர். எனது கணவரும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

குடிசைகளுக்குள் புகுந்து அங்கு 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் யாவரையும் வெளியில் கொண்டதுடன் வயோதிபர் நோயாளிகள் என்போரை அப்பால் செல்லுமாறு கூறினர் பின் உடல் ஆரோக்கியமான இளைஞர்கள் அனைவரையும் தம்மோடு அழைத்துச் சென்றனர் இதில் பெண்களும் அடங்குவர்.

அங்கிருந்து கிழக்கு திசையாகக் காட்டுப்பாதை வழியாக நாங்கள் நடந்தோம் இராணுவச் சிப்பாய் ஆண்களை அழைத்து தமது காலை ஆகாரத்திற்கு முகம் கழுவுவதற்கு நீர் கொண்டுவருமாறு கேட்டனர் அப்பொழுது காலை 8 மணியிருக்கும் அவ்வாறே ஆண்கள் தண்ணீர் கொண்டுவந்ததும் சிப்பாய்கள் தமது காலை ஆகாரத்தை சாப்பிட்டனர். ஆனால் நாங்கள் பட்டினியாக இருந்தோம் ஒரு கோப்பை தேனீர் கூட கிடைக்கவில்லை அவர்கள் தமது காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டதும் எல்லோரையும் தம்மோடு வருமாறு கூறினர் ஆனால் எங்கே என்று கூறவில்லை.

அவர்கள். கட்டளைக்கு இணங்கி நாங்கள் காட்டுவழிபாதை ஊடாக சென்றோம் அப்பொழுது மற்றுமொரு இராணவு சிப்பாய்க் குழு ஒன்றை சந்தித்தோம் அக்குழுவிற்கு தலைமைதாங்கய உத்தியோகத்தர் ஆண்களுடன் பெண்களை அழைத்து வந்ததை பிழையெனக் கண்டுகொண்டார் இரண்டாது குழு தலைவர் பெண்களிடம் வந்து தமிழிலே பேசினார் அவர் கூறும்போது நீங்கள் ஆண்களுடன் வரவேண்டியதில்லை இராணுவ வீரகள் தமக்கு அறிமுகமற்ற பகுதியில் இருக்கின்றனர் எங்களுக்கு ஆண்கள் தேவை அந்த மரத்தின் கீழ் சென்று மதியம் வரை காத்திருங்கள் ஆண்கள் திரும்பிவருவார்கள் என்றார்.

நாங்கள் அந்த மரத்தின் கீழ் காத்திருந்தோம் அவர்கள் குமரன் குளத் திசையில் சென்று கொண்டிருந்தனர் ஆனால் ஆண்கள் திரும்பிவரவில்லை சூரியகதிர்கள் தலையை சுட்டெரிந்தன எமது ஆண்கள் திரும்பிவரும் அறிகுறி எதுவும் தென்படவில்லை வீட்டில் இருக்கும் எமது குழந்தைகளுக்காகவும் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட எமது ஆண்களுக்காகவும் உணவு சமைக்க வேண்டியிருந்தது எங்கள் குடிசைகளுக்கு திரும்பிவந்து உணவு சமைப்பதில் ஈடுபட்டோம் அப்பொழுது கொலை செய்தி வந்தது.

இச் செய்தியை கொண்டுவந்தவர் உயிர் தப்பி வந்தவர் ஏனையவர்கள் குமரன் குளப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டு கிடக்கின்றனர் என கூறினார். இச் செய்தியை கேட்டு நாங்கள் அனைவரும் பாதுகாப்புக்காக உடுத்த உடையுடன் நடந்து சென்று திருக்கோவில், பனங்காடு, அக்கரைப்பற்று பிரதேசங்களில் உள்ள உறவினர்களிடம் தஞ்சம் புகுந்தோம். பின் படுகொலை செய்யப்பட்டவர்களை வயோதிபர்கள் அவ் இடத்துக்கு சென்று சடலங்களை பூர்விக கிராமத்துக்கு கொண்டுவந்து உரிய மரணச்சடங்குடன் புதைக்கப்பட்டனர். வயலூரில் எங்களின் சொத்துக்கள் யாவற்றையும் இழந்தோம்.

கே. வேலுப்பிள்ளை என்பவர் அவரது 2 மகன்களான குழந்தைவேல் ஜெயகாந்தன், (22) நாகலிங்கம் (22) மருமகன் சின்னவன் கந்தசாமி (30) அவரது மூத்த சகோதரன் தம்பிப்பிள்ளை மாமா ஆன ஏரம்பு ஆகியோரும் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

படுகொலையின் போது உயிர் தப்பிய வர்த்தகரான வைரமுத்து கனகசபை பின்பருமாறு கூறினார் அடிக்கடி வியாபார நிமித்தம் வயலூருக்குச் செல்லும் நான் 23ம் திகதி பிற்பகல் 2 மாடுகள் பூட்டிய மாட்டுவண்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு திருக்கோவிலில் உள்ள ஞாயிற்றுக்கிழமை சந்தைக்காக பொருட்களை கொண்டுவர வயலூருக்கு போயிருந்தேன் அன்றிரவு மரவள்ளி கிழங்குகளை பிடுங்குவதற்காக அங்கு தங்கிருந்தேன் 24ம் திகதி காலை அப்பகுதியை விட்டு புறப்படும் போது அவ்குடியிருப்பு பகுதி முழுவதும் இராணுவம் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது நான் விவசாயிகளுடன் ஒரு குடிசையில் இருந்தேன் நான் கைது செய்யப்பட்டாலும் பின் விடுவிக்கப்பட்ட போது நான் எடுத்துச் சென்ற பணமும் சைக்கிளும் காணாமல் போயிருந்தது.

இராணுவத்தினர் என்னை செல்லுமாறு சொன்னதால் நான் சென்றேன் ஆனால் குமரன் குளப் பகுதியில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள இடத்தில் மறைந்திருந்தேன் சிறிது நேரத்தில் துப்பாகி வேட்டுக்கள் கேட்டன பின் இராணுவத்தினர் தமது வாகனத்தில் சென்ற பின்பு நான் அந்த இடத்துக்கு சென்று பார்த்தபொழுது அவர்கள் சுடப்பட்டு இறந்து கிடந்தார்கள் ஆயினும் இரு விவசாயிகள் காயத்துடன் கிடந்தனர் ஒருவருக்கு வாய்க்குள் துப்பாகி வைத்து வெடிவைக்ப் பட்டுள்ளது இவர் இறக்கவில்லை மற்றவரின் பெயர் நடராஜா நான் இச் செய்தியை வயலூருக்கு சென்று கூறினேன் இதில் 40க்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டதாக கனகசபை உறுதிப்படுத்தினார்.

வயலூர் கிராம விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டு 23 வருடங்களின் பின்பு 2008ம் ஆண்டு தான் முதல் முதலாக இப்படுகொலை பற்றி வெளியுலகிக்கு கொண்டுவரமுடிந்தது இருந்தபோதும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் அரசுடன் முதல் முதல் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் தமிழ் மக்களை சிங்கள பேரினவாத அரசின் படையினரால் பெளத்த கோட்பாடு அடிப்படையில் வயலூர் கிராமம் தமிழ் இன அழிப்பின் ஆரம்ப மையப்புள்ளி என்பதுடன் இது ஒரு கிராமத்தையே அழித்த கறைபடியாத படுகொலை யாகும். இக் கிராமம் காடுகளாகிவிட்டது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் சமாதான பேச்சுவார்த்தையின் போது முதல் முதல் நிகழ்ந்த ஒரு படுகொலை என்பதுடன் அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான படுகொலைகள் மூலம் பேரினவாத அரசு தமிழ் மக்களின் பூர்வீக தாயகத்தில் பொத்துவில் தொடக்கம் நீலாவணைவரை தங்கவேலாயுதபுரம், பெத்துவில், குண்டுமடு, அக்கரைப்பற்று, திராய்க்கேணி, வீரமுனை, சென்றல்காம், மல்வத்தை, அம்பாறை நகர், காரைதீவு, கல்முனை, நிந்தவூர் போன்ற தமிழ் கிராமங்கள் இராணுவத்தினராவும் ஊர்காவல்படையினராலும் சுற்றிவளைத்து சிறுவர், இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் என நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் சுட்டும் வெட்டியம் படுகொலை செய்யப்பட்டதுடன் அவர்களது வாழ்விடங்கள் தீ வைத்து எரித்து உடைத்து அழித்தனர்.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தில் பல கிராமங்கள் அழிக்கப்பட்டன இருந்தபோதும் அந்த அழிக்கப்பட்ட வரலாறுகள் வெளியுலகிற்கு கொண்டுவரப்ப டவில்லை இதனால் தற்போதைய சமூதாயத்துக்கு தமிழ் மக்களுக்கு நடந்த படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவே தமிழ் மக்களுக்கு நடந்த படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் அந்தந்த காலத்தில் அதற்கான நினைவேந்தல்களை செய்யவேண்டும் என்பது தமிழ்களின் கடமையாகும்.

இருந்த போதும். தமிழ் இன அழிப்பின் ஆரம்ப புள்ளியாக இந்த மாவட்டத்தில் ஆட்சியாளர்களால் அட்டவணை போட்டு நடாத்தப்பட்ட தமிழின அழிப்புக்களை பறைசாற்றி நிற்கின்றது. என்பதை அனைவரும் உணர்ந்து அதற்கான செயற்பாடுகளை செய்யவேண்டும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "உள்துறை அமைச்சர் என்னும் பெரும் பதவியின் கண்ணியத்தைக் குறைப்பதைக் கண்டிக்கின்றேன்"





## உள்துறை அமைச்சருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கண்டனம்

இந்திய அரசில் அரசியல் சட்டப்படி மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் மாற்றுக் கட்சித் தலைவர்களைப் பற்றி குறிப்பிடும்போது கண்ணியக் குறைவாகவும், நாடாளுமன்ற மரபுகளுக்கு மாறாகவும், தடித்த வார்த்தைகளால் குறிப்பிடுவது மிகவும் வருந்தத்தக்கது. இந்தப் போக்கினை அவர்கள் திருத்திக்கொள்ளவேண்டும்.

பிரிட்டனின் நாடாளுமன்ற மரபுகளை நாம் முன்மாதிரியாகக் கொண்டிருக்கிறோம். அதன்படி மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த உறுப் பினர்களைக் குறிப்பிடும்போது அவர்களின் பெயர்களையே கூறக் கூடாது. மாறாக, இந்தத் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் என்று மட்டுமே கூறவேண்டும். பெயரைக் குறிப்பிடுவது நாடாளுமன்ற மரபுகளுக்கு எதிரானதாகும்.

இந்திய அரசில் உள்துறை அமைச்சராகப் பெரும் பொறுப்பு வகிக்கும் அமித் சா அவர்கள், அண்மையில் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும், தற்போது குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் இந்தியா கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிடும் சுதர்சன் ரெட்டி குறித்துக் குறிப்பிடும்போது, நக்சல் இயக்கத்தின் ஆதரவாளர், அதற்கு ஆதரவான தீர்ப்பை வழங்கியவர் என்னும் கடுமையான குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்.

தான் வகிக்கும் பெரும் பதவியின் பொறுப்பை எண்ணிப் பாராமல் மாற்றுக் கட்சி வேட்பாளரை மிகக் கடுமையான சொற்களால் தாக்கியிருக்கும் உள்துறை அமைச்சரின் போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறேன். உச்சநீதிமன்ற நீதிபதியையோ அவரது தீர்ப்பையோ விமர்சனம் செய்வது நீதிமன்ற அவமதிப்பாகும். மேலும், குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் மாற்று அணியின் வேட்பாளராகப் போட்டியிடும் ஒருவர் மீது தக்க ஆதாரம் எதுவுமின்றி கடுமையான குற்றச்சாட்டை அள்ளிவீசுவது பொறுப்பற்ற போக்காகும். உள்துறை அமைச்சர் பதவியின் கண்ணியத்தைச் சீரழிப்பதாகும். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)
தலைவர்.

# இலங்கையின் இரண்டாவது பெரிய மனித புதைகுழியாக பதிவானது "செம்மணி"

## இதுவரை குழந்தைகள் உள்ளிட்ட 166 எலும்புக்கூடுகள் செம்மணி மனித புதை-குழி வளாகத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன



நீதிமன்றத்தால் குற்ற பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டின் இரண்டாவது பெரிய புதைகுழியாக மாறியுள்ளது.

இரண்டாம் கட்ட அகழ்வாய்வின் 34வது நாளான 26ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் செம்மணி மனித புதைகுழியில் மேலும் 16 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா தெரிவிக்கின்றார்.

அகழ்வு தளத்தை பார்வையிட்ட ஊடகவியலாளர்கள் குழந்தைகளினுடையது என சந்தேகிக்கப்படக்கூடிய எலும்புகளை கண்டுள்ளனர், எவ்வாறெனினும் தடயவியல் பரிசோதனைக்குப் பின்னரே இதுத் தொடர்பில் உறுதிப்படுத்தப்படும் என சட்டத்தரணி ரணிதா கூறுகிறார்.

செம்மணி புதைகுழியிலிருந்து ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான உடல்கள் அடையாளம் காணப்பட்டது 26ம் திகதி அன்றைய தினமாகும்.

செம்மணி மனித புதைகுழி வளாகத்தில் இருந்து இதுவரை குழந்தைகள் உள்ளிட்ட 166 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.





32 நாட்கள் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், ஓகஸ்ட் 6 ஆம் திகதி முதல் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டபோது, செம்மணி மனித புதைகுழியிலிருந்து சிறுவர்கள் உட்பட 150 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

18 நாட்களின் பின்னர் அகழ்வாய்வுகள் 25ம் திகதி திங்கட்கிழமை (ஓகஸ்ட் 25) மீண்டும் ஆரம்பமாகியபோது ஸ்கேன் பரிசோதனைக்கு அமைய அகழ்வு தளத்தை விரிவுபடுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைகுழி மன்னாரில் உள்ள சதொச மனித புதைகுழியாகும். அங்கு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில், இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்றாவது பெரிய புதைகுழியாகக் கருதப்படும் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒரு இடத்திலிருந்து 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இலங்கையில் நான்காவது பெரிய மனித புதைகுழியான கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழியிலிருந்து குறைந்தது 88 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதோடு அதன் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஐந்தாவது பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழியாகும். அங்கு 2013 இல் 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு பணிகள் நிறைவடைந்த நேரத்தில், 52 நபர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன.

# 400 வருடங்களுக்கு மேல் பழைமையான வட்டுக்கோட்டைதுணவி பிரகேஷ்வரன் ஆதி சிவனுக்கு 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹாகும்பாபிஷேகம்

தமிழ் தொல்லியல் மற்றும் பாரம்பரியச் செல்வங்களைப் பாதுகாப்பதையும், அவற்றை வருங்கால சந்ததியினருக்குக் கொண்டு சேர்ப்பதையும் நோக்கமாகக் கொண்ட யாழ்ப்பாண மரபுரிமைய மையத்தின் 3வது செயற்றிட்டம்.

வட்டுக் கோட்டை துணவி கிராமத்தில் வயலும் வயல் சார்ந்த மருத நில பரப்பில் அமைந்துள்ள 400 வருடங்களுக்கு மேல் பழைமையான பிரகேஷ்வரன் ஆதி சிவன் ஆலயம் இயற்கை மற்றும் மனித செயற்பாடுகளால் சிதைவடைந்த நிலையில் பழைமை மாறாத வகையில் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை பூர்வ பக்ஷே ஷஸ்டி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 9.20 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள துலா லக்ன சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

27.08.2025 புதன்கிழமை காலை கர்மாரம்பம். விக்னேஸ்வரபூசை, புண்ணியாவாசனம். அனுக்ஞை. வி-நாயக. நவக்கிரக வழிபாடு மாலை வாஸ்து சாந்தி. நூஉதன மூர்த்திகள் ஸ்தாபனம். அஸ்டபந்தனம்.

28.08.2025 வியாழக்கிழமை காலை யாகபூசை.தைலாப்பியாசம், பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் மாலை யாகபூசை, விம்பகத்தி தத்துவநியாசம் ஐயர்சாருதி.

29.08.2025 வெள்ளிக்கிழமை காலை யாகபூசை மகாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து தச தரிசனம் மகா அபிஷேகம்.

மதியம் அன்னதான நிகழ்வு

அடியார்கள் அனைவரும் நடைபெறும் கிரியைகளிலும் மஹா கும்பாபிஷேகத்திலும் பங்குபற்றி ஆதிசிவனின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

யாழ்பாண மரபுரிமைய மையம்



கனடிய செய்திகள்
Canadian News

# கனடா – பிக்கரிங் நகரின் அருள்ஜோதி சிவாலய பரிபாலன சபையினர் நடத்திய சிறப்பான "ஆன்மீகப் பெருவிழா"



24-08-2025 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை கனடா - பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் அருள்ஜோதி சிவாலயத்தின் பரிபாலன சபையினர் நடத்திய "ஆன்மீகப் பெருவிழா"வில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிறார்களுக்காக நடத்தப்பெற்ற பண்ணிசைப் போட்டி மற்றும் தேவார மனனப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக கனடா வாழ் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்தார்.

மேற்படி பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் அருள்ஜோதி சிவாலயத்தின் பரிபாலன சபையினர் நடத்திய "ஆன்மீகப் பெருவிழா"வில் முக்கிய நிகழ்வாக தமிழ்க் கனடியர்களில் 15 பேருக்கு சிறப்பு விருதுகள் ஒவ்வொரு பெயரில் வழங்கப்பெற்றன.

















விருது பெற்றவர்களில் எமது பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் மற்றும் மகப்பேறு வைத்திய நிபுணர் டாக்டர் குமாரசாமி கிருபானந்தன் மற்றும் உதயன் லோகேந்திரலிங்கம் - அனலை எக்ஸ்பிரஸ் விமல்டி தவராஜா மற்றும் பி. எஸ். சுதாகரன் ஆகியோரும் அடங்கியிருந்தார்கள்.

கலை நிகழ்ச்சிகள் ரசிக்கும் வகையிலும் பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்யும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஆன்மீகப்பெருவிழாவில் விருதுகளைப் பெற்றவர்கள் பின்வருமாறு:
சிவஸ்ரீ தீர்த்தனராஜக்குருக்கள் சிவசாமி ஐயர்.
திருமதி. விஜயலக்சுமி சீனிவாசகம் - இசைத்துறை
திரு. எம்.பி. நாகேந்திரம் - இசைத்துறை
திரு. அமுதீசன்
டாக்டர் கு. கிருபானந்தன் - மகப்பேறு மருத்துவம்
திருமதி. பத்மினி ஆனந்த் - பரதக் கலை
திரு. லோகன் லோகேந்திரலிங்கம் - கலை இலக்கியம் மற்றும் ஊடகத்துறை
திரு. உதயன் செல்வரட்னம்
திரு. விமல் தவராஜா ஊடகம் மற்றும் கலை.
திரு. பி.எஸ் சுதாகரன்- ஊடகம் மற்றும் சினிமாத்துறை
திரு. டினேஸ் ரட்னசிங்கம்
யுனிற்றா நாதன் - அரசியல் மற்றும் சமூக சேவை
திருமதி. ரவீனா ராஜசிங்கம் - மருத்துவம் - சமூக சேவை
திரு. பாலகங்காதர திலக் சோமசுந்தரம்

மேற்படி பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் அருள்ஜோதி சிவாலயத்தின் பரிபாலன சபையினர் நடத்திய பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் அருள்ஜோதி சிவாலயத்தின் பரிபாலன சபையினர் நடத்திய "ஆன்மீகப் பெருவிழா"விற்காக அனைத்து ஏற்பாடுகளையும் ஆலயத்தின் பிரதம குரு கலாநிதி சாம்பசிவ சோமஸ்கந்த குருஜீ மற்றும் கோபி குருக்கள் ஆகியோர் தங்கள் உதவியாளர்களுடன் சிறப்பாகச் செய்தார்கள்.

- நன்றி புகைப்படங்களுக்கு, ரவி அச்சுதன் அவர்கள்

- விமர்சனம் - சத்தியன்

## அந்திப்பொழுது அழகே!

*அந்தியில் ஆதவன் ஆழியில் அடங்குவதும்*
*அந்நேரம் அழகாய் அடிவானம் சிவப்பதும்*
*செந்தமிழில் சிறார்கள் சீராகப் பாடிட*
*சின்னஞ் சிறிசுகள் சேர்ந்து விளையாட*
*கோபியர் கோவிலில் கோலவிளக் கேற்றலும்*
*கோவினம் கோதையைக் கூவி அழைக்க*
*ஆபிசாரம் ஆனந்தமாய் ஆலயத்தில் ஒலிக்க*
*ஆசாரம் கொண்ட அருமை அழகே!*

*பள்ளிச் சிறார்கள் பள்ளியால் வருவதும்*
*புள்ளினம் இரைமுடித்து புகலிடம் தேடுவதும்*
*வள்ளிப் பாட்டி வடைகள் சுடுவதும்*
*வெள்ளிக் கூட்டம் விண்ணில் தெரிவதும்*
*கோவிலில் திருவிழா குறைவற நடப்பதும்*
*கோவிந்தன் வீதியுலா கோலமாய்ச் செல்வதும்*
*ஆவி பறக்க அன்னதானம் நடப்பதும்*
*ஆசையாய் அடியார் அருந்துதல் அழகே!*

*வலைஞர் வள்ளத்தில் வலையுடன் போவதும்*
*விலைமிகு மீன்களுடன் விரைந்து வருவதும்*
*கலைஞர் காத்தான் கூத்தாடிக் களிப்பதும்*
*காலைவரை கண்விழித்து கண்குளிரக் காண்பதும்*
*வெண்முகிலும் வெண்மதியும் விண்ணில் விளையாட*
*வெண்புறாக்கள் விரைந்து வீடு திரும்பிட*
*வண்டி மாடுகள் வளைய வருவதும்*
*வண்ணமீன்கள் வாவியில் விரைவதும் அழகே!*

*அந்திநேரம் அந்திமந்தாரை மலர்வதும்*
*அருந்ததி நட்சத்திரம் அரிதாய்த் தோன்றுவதும்*
*அந்திப் பொழுது அழகாய் அமைந்ததும்*
*அந்திம காலத்தில் அமைதியாய் இருப்பதும்*
*கண்ணான பேரர் கதையைக் கேட்பதும்*
*கடைசிக் காலத்தைக் கவலையிலாக் கழிப்பதும்*
*எண்பது வயதிலும் இளமையாய் இருப்பதும்*
*எண்ணிப் பார்த்தால் எல்லாம் அழகே!*
*(குறிப்பு: ஆபிசாரம் – மந்திரம்)*

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844 – 7453

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24






## Skandavarodaya Old Students' Association - Canada

**ஸ்கந்தவரோதயா பழைய மாணவர் சங்கம் - கனடா**

**Summer Get - Together 2025 & Annual General Meeting**

**August 30, 2025, Sunday 10 am**

**Milliken Park Picnic Site 2**

**5555 Steeles Ave. East, Scarborough (McCowan & Steeles)**

**Contact:**
**Jeyadevi 647 454 9617**
**Judita 416 402 4495**





**Lots of Games, Prizes & Food**

**For A fun filled day, Please Join us with your Family and friends**







## NISSAN | VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

# ALL-IN CLEAROUT EVENT













**SajanthanVijayakumar**
Brand Ambassador

647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




**Prajath Nageswaran**
Brand Ambassador

416-879-7410
Prajath@villagenissan.com




GOLDENBELL PRODUCTIONS
presents
GALA DANCE 2025
Co-presented by
CYNDY'S DANCE STUDIO
Title Sponsor
Vijaya Jewellery
Date: August 31st, 2025
Venue: Chinese Cultural Centre,Scarborough
*TICKET HOTLINE*
+1 (416)-728-4071 & +1 (437)-240-6717
MT CPA CA
TGS
TECH GURU CONSULTING
Majith Zahir Hussain
647-535-3234
BUY • SELL • INVEST
NAZ LAW
New Nanthus Kitchen
PIONEER MONEY TRANSFER
ACCOTECH FINANCIAL SERVICES
Anne Xavier
SELAI
REKHA'S ENTERTAINMENT NETWORK
HI FI BARBERSHOP
ATCC
tamil one


DISCOVER
THE LION IN YOU
LION
EXTRA
STRONG BEER
STOUT
ENDORSED BY THE GREAT BEER HUNTER, MICHAEL JACKSON
ONLY STOUT IN ASIA TO BE LISTED IN 300 BEERS TO TRY BY ROGER PROTZ
99/100 ratebeer
AVAILABLE IN 473ML CANS AT
LCBO
BEER STORE
LCBO.COM
THEBEERSTORE.CA
FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020
OR EMAIL:
FRED@FINEBEERS.CA

# ""“ஒப்பரேஷன் மிஸ்டர் கிளீன்”" பழிவாங்கலா ...மிரட்டலா?

***"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ததன் மூலம் அநுர அரசு எதனை சாதிக்கப் பார்க்கின்றது? இந்த கைது அநுர அரசுக்கு சாதமாக அமையுமா பாதகமாக அமையுமா? ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ய வேண்டிய அவசியம், அவசரம் அநுர அரசுக்கு ஏன் ஏற்பட்டது?"***

**— — — பாலா — — —**



இலங்கையில் 1993 மே 17 முதல் 2022 ஜூலை 22 வரையிலான காலப்பகுதியில் 6 தடவைகள் பிரதமராகவும் 20 ஜூலை 2022 முதல் 22 செப்டெம்பர் 2024 வரை ஜனாதிபதியாகவும் பதவிவகித்த “மிஸ்டர் கிளீன்” என சிங்களவர்களினாலும் “அரசியல் நரி” என தமிழர்களினாலும் இலங்கையின் முதல்தர, பிரபல்யம் மிக்க அரசியல் தலைவராக சர்வதேசத்தினாலும் அழைக்கப்பட்டு வந்த ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-என்.பி.பி. அரசினால் கைது செய்யப்பட்டமை இலங்கையில் அரசியல் சுனாமியை ஏற்படுத்தி விட்டுள்ளது.

1988-1989ஆம் ஆண்டு கலவர காலப்பகுதியில் ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சியில் பட்டலந்த வீட்டுத்தொகுதியில் செயற்பட்ட பட்டலந்த வதைமுகாமின் சூத்திரதாரி, மத்தியவங்கி பிணைமுறி மோசடி, உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத்தாக்குதல் போன்றவற்றில் தொடர்புபட்டவர் என்ற குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அநுரகுமார அரசினால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்படாமல் “ஒரு கோடி 66 இலட்சம் ரூபா அரச பணத்தை தவறாக பயன்படுத்தினார்” என்ற சிறிய குற்றச்சாட்டில் கைதானமைதான் பல்வேறு கேள்விகளையும் சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் கலவரங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் முதல்தர அரசியல்வாதி. புகழ்பெற்ற குடும்பத்தை சேர்ந்தவர். 1977ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக இலங்கைப் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே அரசியல்வாதி. தனது அரசியல் வாழ்வில் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளுக்குள்ளானாலும் ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுக்களில் சிக்காதவர் .மத்திய வங்கி பிணை முறி மோசடியில் சிக்க வைக்கப்பட்டாலும் குற்றம் நிரூபிக்கப்படாதவர்.அதனால்தான் அவரை அரசியல் எதிரிகள் கூட “மிஸ்டர் கிளீன்” என அழைப்பர். அவ்வாறான “மிஸ்டர் கிளீன்” ஆன முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தற்போதைய ஜனாதிபதியான “மிஸ்டர் ஏகேடி” (யுெரசய முரஅயசய னுளையயெலயமமய - யுமுனு) அதிரடியாக கைது செய்தது ஏன்?

1988 - 1989 ஆம் ஆண்டு கலவர காலப்பகுதியில் ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சியில் பட்டலந்த வீட்டுத்தொகுதியில் செயற்பட்ட பட்டலந்த வதைமுகாமில் வைத்து தமது தோழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டமை, காணாமலாக்கப்பட்டமை போன்றவற்றிற்கு பழி தீர்க்கவே அது தொடர்பில் குற்றம்சாட்டப்படும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தற்போது ஜே.வி.பி.-என்.பி.பி. அரசு கைது செய்து பழி தீர்த்துள்ளது என ஒரு சாராரும் தமது சரிந்துபோகும் மக்கள் ஆதரவை தூக்கி நிறுத்த ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட தாக இன்னொரு சாராரும் கூறி-வரும்

நிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதின் பின்னால் “மிரட்டல் அரசியல்” உள்ளதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ததன் மூலம் அநுர அரசு யாரை மிரட்டப் பார்க்கின்றது? எதற்காக மிரட்டப் பார்க்கின்றது? இந்த மிரட்டல் கைது மூலம் அநுர அரசு எதனை சாதிக்கப் பார்க்கின்றது? இந்த மிரட்டல் கைது அநுர அரசுக்கு சாதமாக அமையுமா பாதகமாக அமையுமா? ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து மிரட்ட வேண்டிய அவசியம், அவசரம் அநுர அரசுக்கு ஏன் ஏற்பட்டது என்பது தொடர்பில் பார்ப்போம்.

மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றா மை, மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்தாமை, புதிய திசையில் பயணிக்காமை, ஜே.வி.பி.-என்.பி.பி. கூட்டு அரசுக்குள் பிரதமர் பதவி தொடர்பில் ஏற்பட்டுள்ள மோதல்கள், அமைச்சர்கள் சிலரின் கோமாளித்தன செயற்படுகள், கருத்துக்கள், சில அமைச்சர்கள் மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள், அவ்வாறானவர்களை பாதுகாக்கும் அரசின் செயற்பாடுகள். இன்னும் சில அமைச்சர்களின் வீராப்பு, தலைக்கன பேச்சுக்கள், நடவடிக்கைகள், ராஜபக்ச குடும்பத்தை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் அரசியல் பழிவாங்கல்களினால் அநுர அரசு மீது மக்கள் வைத்த நம்பிக்கை தினமும் சரிந்து செல்கின்றது.

அதுமட்டுமன்றி சிவப்பு சட்டைக்காரர்களான அநுரகுமார அரசின் சீன சார்புக்கொள்கையும் சீன ஆதரவுப் போக்கும் சீனாவுக்கான முக்கியத்துவமளிப்பும் அமெரிக்க, இந்திய நாடுகளை சீற்றம் கொள்ள வைத்துள்ளதனால் அநுரகுமார அரசுக்கான மறைமுக அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. இதன் வெளிப்பாடாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் ராஜபக்சக்களுடனும் அண்மையில் நடத்திய சந்திப்புக்கள், ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசுடன் காட்டி வரும் நெருக்கம், நாட்டில் மீண்டும் ராஜபக்சக்களுக்கு அதிகரித்து வரும் மக்கள் செல்வாக்கு என்பன புலனாய்வுத்துறையினரால் அநுர அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

இதுமட்டுமன்றி அண்மையில் பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சரும் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகக்கொண்டுவர வேண்டுமென்பதில் தீவிரமாக இருந்தவருமான பிரசன்ன ரணதுங்கவின் மகளின் திருமணத்தில் பங்கேற்ற முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் தனிமையில் நீண்ட நேரம் நடத்திய கலந்துரையாடல், அதன் தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த இரகசிய சந்திப்பொன்றில் “அவர்களை (ஜே.வி.பி.-என்.பி.பி.) ஒரு வருடம் ஆட்சி செய்ய விடுங்கள்.அதன் பின்னர் என்ன செய்ய வேண்டுமென நான் உங்களுக்கு கூறுவேன்” என ரணில் கூறிய விடயமும் அநுர அரசின் காதுகளுக்கு எட்டியது.

இவ்வாறான நிலையில்தான் நாட்டில் மீண்டுமொரு ஆட்சி மாற்றத்திற்கான திரைமறைவு வேலைகள் அமெரிக்க, இந்திய பின்புலத்துடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ராஜபக்சக்களின் ஆதரவுடன் முன்னெடுப்படுவதாக அறிந்து சுதாரித்துக் கொண்ட அநுர அரசு இந்த முயற்சியை முளையிலேயே கலைத்துவிட, அழித்துவிட என்ன செய்யலாம் என நன்கு சிந்தித்து எடுத்த முடிவே “ஒபரே‘ன் மிஸ்டர் கிளீன்” என்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக கைது செய்யும் நடவடிக்கை. இதற்கு பட்டலந்த வதைமுகாம், மத்தியவங்கி பிணை முறி மோசடி, உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத்தாக்குதல் குற்றச்சாட்டுக்கள் உடனடியாக கை கொடுக்காது என்பதாலேயே “ஒரு கோடி 66 இலட்சம் ரூபா அரச பணத்தை தவறாக பயன்படுத்தினார்” என்ற சிறிய குற்றச்சாட்டை பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து அநுர அரசு அதிர்ச்சி கொடுத்துள்ளது.




அநுர அரசு ஊழல், மோசடி பெருச்சாளிகளான ராஜபக்சக்களை கைது செய்யாமல் ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்ததற்கு ரணில் விக்கிரமசிங்கவின் “சாணக்கிய அரசியல்” மீதான அச்சமே பிரதான காரணம். அநுர அரசைப் பொறுத்த வரையில் ராஜபக்சக்கள் அவர்களுக்கு ஒரு சவால் அல்ல. ராஜபக்சக்கள் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள், வழக்குகள் உள்ளதால் எந்த நேரம் விரும்பினாலும் அவர்களை உள்ளே தள்ளிவிட முடியும். அவர்கள் அரசியல் ரீதியாக நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தால் அவர்களுக்கு சட்ட ரீதியாக பதிலடி கொடுக்கும் திட்டத்திலேயே அநுர அரசு அனைத்து வழக்குகளையும் தயார் நிலையில் வைத்துள்ளது. இது ராஜபக்சக்களுக்கும் நன்கு தெரியும். அதனால் அவர்கள் ராஜபக்சக்களாக ஆட்சிமாற்ற சூழ்ச்சிகளில் ஈடுபடமாட்டார்கள்.

ஆனால் “அரசியலில் நரி”யான ரணில் விக்கிரமசிங்க சதிகள், சூழ்ச்சிகள் . ஆட்சிமாற்றங்களில் பழம் தின்று கொட்டைபோட்டவர். நோகாமல் நொங்கு எடுப்பதில் வல்லவர். அதனால்தான் கோத்தபாய ராஜபக்சவை பதவியிலிருந்து விரட்ட ஒரு தரப்பினர் உயிரைப் பணயம் வைத்து போராடியபோதும் அந்தப்போராட்டத்தை பயன்படுத்தி தனது நிறைவேறாத ஆசையான ஜனாதிபதி பதவியை “தனி ஒருவன்” ஆக அலங்கரித்தவர். அதனால்தான் ரணில் எப்போதும் தமது ஆட்சிக்கு ஆபத்தானவர் என்பதனை அநுர அரசு நன்கு தெரிந்து வைத்துள்ளது. அதனால்தான் தமது ஆட்சியை பாதுகாக்க முதலில் ரணிலை களையெடுத்து அதன் மூலம் ராஜபக்சக்களை அச்சுறுத்தவும் மிரட்டல் அரசியலை கையில் எடுத்தது.

யார் ஆட்சி பீடம் ஏறினாலும் சட்ட ரீதியாக ரணில் விக்கிரமசிங்கவை தொட முடியாது என்ற விம்பத்தை உடைக்கவும் அதன் மூலம் ரணிலுக்கு இந்த நிலை என்றால் நமது நிலை என்னவென ஏனைய முன்னாள் ஜனாதிபதிகள், எதிர்கட்சியினரை நடுங்க வைக்கவுமே முதல் அடியாக, தலை அடியாக அநுர அரசு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து உள்ளே தூக்கி போட்டு இலங்கை அரசியலையே ஆட்டம் காண வைத்துள்ளது. இந்தக் கைது அநுர அரசு எதிர் பார்த்த மாதிரியே எதிர்கட்சியினரை கலங்க வைத்தாலும்

அரசியலில் நரியான ரணில் விக்கிரமசிங்க கனவிலும் நினைத்துப்பார்க்காத அவமானத்தை அநுர அரசு ஏற்படுத்தியுள்ளதால் தற்போது “அடிபட்ட பாம்பாக” மாறியுள்ள ரணில் அநுர அரசை பழிதீர்க்க துடிப்பார். எனவே அநுர அரசுக்கும் இனிவரும்காலம் அரசியல் சவால்கள் மிக்கதாகவே இருக்கப்போகின்றது என்றும் குறிப்பிடலாம்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் இரத்த வாந்தி எடுத்த இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் இரத்த வாந்தி எடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் 25ம் திகதி திங்கட்கிழமையன்று உயிரிழந்துள்ளார். அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தெ.கோபாலசாமி (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குடும்பஸ்தர் கடந்த 24ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள உறவினரின் வீட்டுக்கு சென்றிருந்தார். அடுத்த நாள் அதிகாலை 3.00 மணியளவில் அங்கு இரத்த வாந்தி எடுத்த நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை யன்று இரவு உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# சுமந்திரனுக்கு எதிரான யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவுகளின்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக செயற்பட்டதாக கூறி வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொன்னம்பலம் ராசேந்திரம் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து சுமந்திரனால் கடிதம் ஒன்றின் மூலம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து குறித்த பிரதேச சபை உறுப்பினர், சுமந்திரன் தன்னை எந்த அடிப்படையுமற்று, மத்தியக்குழுவின் தீர்மானம் எதுவுமின்றி கட்சியில் இருந்து தன்னிச்சையாக நீக்கியதாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

கடந்த தவணை குறித்த வழக்கில் தோன்றிய தமிழரசு கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் குறித்த வழக்கு தாக்கல் செய்ததே தவறு என தமது ஆட்சேபனையினை எழுத்துமூலம் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த ஆட்சேபனைக்கு 26ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை தமது பதில் ஆட்சேபனையை பிரதேச சபை உறுப்பினர் தாக்கல் செய்திருந்தார்.

அதில் குறித்த கட்சியின் தலைவர் மற்றும் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையானது ஒரு பகுதி ஆங்கிலத்திலும் அதன் மறு பகுதி தமிழிலும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை சட்டத்திற்கு புறம்பானது, யாழ்ப்பாணத்தில் நீதி நிர்வாக மொழி தமிழ் ஆகையால் முழுமையாக தமிழிலேயே ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட வேண்டும் என பிரதேச சபை உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கானது ஐப்பசி மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



# ஐ.நா தலையீட்டின் பின்னர் இந்தியாவில் இருந்து வரும் தமிழ் அகதிகள் கைதாவது நிறுத்தப்பட்டது

போர் அச்சம் காரணமாக தமிழ்நாட்டிற்கு தப்பிச் சென்ற இலங்கையர்கள் தாய்நாட்டிற்குத் திரும்பும் போது கைது செய்யப்படுவதால், அவர்களுக்கு வழங்கிய குடியேற்ற உதவியை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் நிறுத்தியதை அடுத்து, தடைகளை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

"போரின் போது அகதிகளாக இந்தியாவின் தமிழ்நாட்டிற்குச் சென்ற இலங்கை குடிமக்கள், எங்கள் சொந்த குடிமக்கள், ஒரு குழு இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் இப்போது இந்த நாட்டிற்கு, தங்கள் தாயகத்திற்குத் திரும்பி வருகின்றனர். இரண்டு சந்தர்ப்பங்களில், அவர்கள் இங்கு வந்தபோது இரண்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. குடிவரவுச் சட்டங்களின்படி அவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறவில்லை அல்லது அங்கீகரிக்கப்பட்ட துறைமுகத்தின் ஊடாக அவர்கள் வெளியேறவில்லை என்பதற்காக குடிவரவுச் சட்டங்களின் கீழ் அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். இந்த விடயத்தில் நாங்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்."

அந்தத் தடைகளை நீக்க அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் நடவடிக்கைகள் எடுக்க எதிர்பார்ப்பதாக பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

"தற்போது இந்தியாவில் உள்ள எங்கள் குடிமக்கள் தடையின்றி இந்த நாட்டிற்குத் திரும்புவதற்குத் தேவையான வசதிகளை வழங்குமாறு ஜனாதிபதி குறிப்பாக அறிவுறுத்தியுள்ளார். தற்போது, நாங்கள் ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை தயாரித்துள்ளோம். அந்தத் தடைகள் அனைத்தையும் நீக்கி, அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் அவர்களை இந்த நாட்டிற்கு அழைத்து வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம்."

இலங்கை வந்தவுடன் கைது செய்யப்படுவார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், இலங்கைத் தமிழ் அகதிகளை தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்புவதை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (UNHCR) தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக தி இந்து அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

ஓகஸ்ட் 14, 2025 அன்று திருச்சியிலிருந்து கொழும்புக்கு ஏழு அகதிகளை திருப்பி அனுப்புவது கடைசி நேரத்தில் இரத்து செய்யப்பட்டதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கைக்குத் திரும்பும்போது குடிவரவுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் குறைந்தது நான்கு அகதிகள் தடுத்து வைக்கப்பட்டதாக செய்திகள் வெளியான நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (UNHCR) திருப்பி அனுப்பப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட ஸ்ரீமன் ரிச்சர்ட் செல்வச்சந்திரம் (54), ஓகஸ்ட் 12, 2025 அன்று கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தவுடன் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இருப்பினும், அவர் சுயமாக இந்த நாட்டுக்குத் திரும்பும் ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் அவர் திரும்பி வருவது குறித்து எந்த பாதுகாப்பு பிரச்சினைகளும் இருக்கவில்லை என தி இந்து செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேபோல், உள்நாட்டுப் போரின் போது பல தசாப்தங்களுக்கு முன்பு நாட்டை விட்டு வெளியேறிய மற்றொரு தமிழ் அகதி மே 28, 2025 அன்று யாழ்ப்பாணத்தில் தரையிறங்கிய பின்னர் கைது செய்யப்பட்டார்.

ஓகஸ்ட் முதல் வாரத்தில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் (UNHCR) உதவியின்றி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் விமானம் மூலம் வந்த இலங்கை தமிழ் தம்பதியினரும் கைது செய்யப்பட்டனர். இந்த தம்பதி 1996 முதல் இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இலங்கைக்கு வந்தவுடன், அவர்கள் குடியேற்ற அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தி இந்து செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.


"தாமாக நாடு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதி செய்வதே அடிப்படைக் கொள்கை. குற்றவியல் வழக்கு நிலுவையில் இல்லாவிட்டால் கைது செய்யப்படக்கூடாது. இனங்களுக்கிடையேயான மோதலில் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தில் தங்கள் நாட்டை விட்டு வெளியேறும் அகதிகள், முறையான குடியேற்றச் சட்டங்களைப் பின்பற்றாததற்காக மன்னிக்கப்படுவார்கள்", என மீண்டும் நாட்டுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ள மூத்த இந்திய அதிகாரி ஒருவர் தி இந்துவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குத் திரும்பும் அகதிகளைத் தடுத்து நிறுத்துவது குறித்து இராஜதந்திர வழிகளில் விவாதிக்கப்படுமென தனது அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பாத அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"குடியேற்றச் சட்டங்களை மீறியதற்காக அகதிகள் கைது செய்யப் படமாட்டார்கள் என்றும், அவர்கள் மரியாதையுடன் நடத்தப்படுவார்கள் என்றும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்கும் வரை திருப்பி அனுப்பும் செயல்முறை நிறுத்தி வைக்கப்படும்" என அதிகாரி குறிப்பிட்டதாக தி இந்து செய்தி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.


Tamilthakaval.org

ஒரு இலவச சேவை -- A Free Service



இணையத்தளம்: www.tamilthakaval.org

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளத்துக்கான யாழ். மாவட்ட பெண்கள் வலையமைப்பின் புதிய நிர்வாகம் தெரிவு!



இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளததின் யாழ் மாவட்டத்திற்கான பெண்கள் வலையமைப்பின் புதிய நிர்வாகக்குழு அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் யாழ் கிரீன் கிராஸ் விருந்தினர் விடுதியில் 28ம் திகதியன்று வியாழக்கிழமை காலை இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பிரதீப் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி மன்றங்களின் 50 இற்கும். மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்ட குறித்த கூட்டத்தின் போது புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

புதிய நிர்வாகத்தின் தலைவராக: வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் அனுஷியா ஜெயகாந்தும் உப தலைவராக யாழ் மாநகரசபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளராக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கௌசலா சிவாவும், உப செயலாளராக, சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் பௌலினா சுபோதினியும் தயாளராசாவும், பொருளாளராக வலி மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெயகாந்தன் துவாரகாதேவியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# "அயோக்கியன்" ரணில் என்பவனுக்காக அலறும் ஏனைய "அயோக்கிய" அரசியல்வாதிகள்



விடுதலைப்புலிகளுக்குக்கு உணவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் பதுளையை சேர்ந்த காத்தாய் என்ற 69 வயது பெண் 1994ல் கைது செய்யப்பட்டார்.

19 வருடங்களாக அவர் சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். அவருக்கு ஏற்பட்ட புற்றுநோய் மற்றும் படுக்கை புண்களுக்கு சிகிச்சை வழங்கப்படவில்லை. அதனால் அவர் 2013 இல் சிறையில் பரிதாபகரமாக மரணமானார்.

ஒரு மலையக மூதாட்டிக்கு சிகிச்சை மறுக்கப்பட்டு மரணம் அடைந்தது ஜனநாயக படுகொலையாக மலையக தலைவர்களான மனோ கணேசன், திகா போன்றவர்களுக்கு தெரியவில்லை. இவர்களில் திகாம்பரம் என்பவர் ஒரு கஞ்சா கடத்தல்காரர் என்று மோசடி மன்னன் மகிந்தாவினால் எச்சரிக்கப்பட்டவர்.

ரணில் என்றவுடன் வீதிக்கு இறங்கி கூக்குரல் போடுகிறார்கள். ஆனால் மக்கள் பணம் 160 லட்சம் ரூபாவை சுருட்டியருக்கு 3 நாட்களில் பிணை வழங்கியமை ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என்கிறார்கள்.

ஒருவன் அயோக்கியன் என்று நன்கு தெரிந்தும் அவனை நியாயப்படுத்த முயல்பவன் அவனைவிட அயோக்கியன் ஆவான்.

160 லட்சம் ரூபா மக்கள் பணத்தை சுருட்டிய ரணிலை நியாயப்படுத்த முயல்வோர் ரணிலைவிட அயோக்கியர் ஆவர்.

முதநூலின் தோழர் பாலன் பதிவிருந்து.

(சில மாற்றங்களுடன் கனடா உதயன் ஆசிரியபீடம்)

# வரலாறு தெரியாத ஒரு நடிகருக்கு எமது அமைச்சர் "கச்சதீவு எங்களுடையது இதனை விட்டுத் தர முடியாது" என்று கூறவேண்டிய அவசியம் இல்லை




வரலாறு தெரியாத ஒரு நடிகருக்கு எமது அமைச்சர் “கச்சதீவு எங்களுடையது இதனை விட்டுத் தர முடியாது” என்று கூறவேண்டிய தேவை இல்லை. கச்சதீவை மீட்க முயற்சிக்கும் இந்திய மத்திய அரசுக்கும் தமிழக வெற்றி கழகத்திற்கும், சீனாவிடம் பறிபோகும் தமது நிலத்தினை மீட்பதற்கு துப்பிருக்கிறதா என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் கேள்வி எழுப்பினார்.

28ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மதுரையில் நடைபெற்ற தமிழக வெற்றி கழகத்தின் மாநாட்டில் அந்த கட்சியின் தலைவரான கத்துக்குட்டி அரசியல்வாதி விஜய், கச்சதீவு இந்தியாவிற்கு சொந்தம் என கூறியுள்ளார். இந்த விடயமானது கவலையாக இருந்தாலும் இது காலத்திற்கு காலம் அரசியல் இலாபம் கருதி பெரிய பெரிய காட்சிகளும் தமிழ்நாட்டு மீனவ மக்களை ஏமாற்றுவதற்கும் அவர்களுடைய வாக்குகளை பெறுவதற்கும் செய்யப்படுகின்ற நாடகம்.

விஜய், இலங்கை - இந்தியாவிடையே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான கருத்துக்களை கேட்டு அறியாமல் கச்சத்தீவு இந்தியாவுக்கு சொந்தமென சொல்லியிருக்கின்றமை தமிழ்நாட்டு மீனவ மக்களை ஏமாற்றுகின்ற செயற்பாடு.

பழம்பெரும் அரசியல் தலைவர்களுக்கும் தெரியும் கச்சதீவை இலங்கையிடமிருந்து இருந்து மீட்க முடியாது. கச்சதீவு விடயத்தினை அரசியலாக்கி தமிழக மீனவர்களுடைய வாக்குகளை பெற்றுக் கொள்வதே அவர்களுடைய நோக்கம். அதைத் தவிர இதில் வேறு எதுவும் கிடையாது.

இந்தியாவினுடைய ஒரு பக்கத்தை தான்தோன்றித்தனமாக சீனா கைப்பற்றி வருகின்றது. அதில் ஒரு இஞ்சி அளவு நிலத்தை கூட பறிப்பதற்கு துப்பில்லாத இந்திய அரசாங்கமும், தமிழக வெற்றி கழகமும் இலங்கையில் உள்ள கச்சதீவு தமக்கு சொந்தம் என்றும் அதனை திருப்பிப் பெறுவோம் என்றும் கூறுவது ஒரு வேடிக்கையான விடயம்.

வரலாற்றினை விஜய் படித்திருக்க வேண்டும். அவருக்கு நான் சொல்லுகின்ற ஒரு புத்திமதி, கச்சதீவில் இருந்து இராமேஸ்வரம் ஏறத்தாழ 30 மைல் தொலைவில் உள்ளது. நெடுந்தீவில் இருந்து தொண்டி 30 மைல் தொலைவில் உள்ளது. கச்சதீவில் இருந்து கோதண்ட ரமர் கோவில் 30 மைல் தொலைவில் உள்ளது. ஆனால் தலைமன்னாரில் இருந்து 18 மைல் தொலைவிலே தனுஷ்கோடி இருக்கின்றது. ஏன் தனுஷ்கோடியை நாங்கள் எமது நாட்டினுடைய பகுதி என்று கூறவில்லை?

தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் எமக்கும் இடையே நீண்ட காலமாக சட்டவிரோத இழுவைமடி தொழிலே ஒரு பிரச்சனை இருக்கிறது. அதற்கு கச்சதீவு பரிகாரமாக முடியாது. இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினையை நிரந்தரமாக தீர்ப்பதாக இருந்தால் சட்டவிரோத இழுவைமடி தொழிலை நீக்க வேண்டும்.

முடிந்தால் மத்திய அரசுடன் விஜய் பேசி, அவர்கள் மூலமாக எங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வந்து எமது நாட்டின் ஒரு பகுதியான கச்சதீவை தருமாறு கேட்கலாமே தவிர மீட்க முடியாது. அரசியலுக்காக விஜய் கச்சதீவு பிரச்சினையை கையில் எடுத்திருப்பது கண்டிக்கத்தக்க விடயம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டம் எல்லோருக்கும் சமம் என்றால் தையிட்டி விகாரையில் ஏன் ஜனாதிபதி நிலை நாட்டவில்லை என்கிறார் சபா குகதாஸ் கேள்வி



நாட்டில் சட்டம் எல்லோருக்கும் சமம் எனக் கூறும் ஜனாதிபதி அநுர ஏன் தையிட்டி சட்டவிரோத விகாரை விவகாரத்தில் சட்டம் எல்லோருக்கும் சமம் என்பதை நிலை நாட்டவில்லை அப்படி என்றால் நாட்டில் இரண்டு சட்டமா? வடக்குக்கு ஒரு சட்டம் தெற்கிற்கு பிறிதொரு சட்டமா என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், தனியார் காணியில் அத்துமீறி கட்டிய விகாரை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் சட்டரீதியாக கோரி நிற்கும் விடையத்தை தட்டிக்கழித்து மீண்டும் அந்த மக்களின் காணியில் மேலதிக கட்டங்களை கட்டிக் கொண்டு நாட்டில் எல்லோருக்கும் சட்டம் சமம் என்று கூறுவது ஜனாதிபதியின் பெரும் பித்தலாட்டம்.

தெற்கில் நாட்டில் சட்டம் எல்லோருக்கும் சமம் என்று பேசிக் கொண்டு வடக்கில் சட்டத்தை அரச திணைக்களம் மற்றும் இராணுவ முகாம்கங்கள் போன்ற வற்றின் செயற்பாடுகள் மூலம் வடக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை தடுப்பது எந்தவகையில் சட்டம் எல்லோருக்கும் சமம் என்பதை உறுதி செய்கிறது ஆகவே ஜனாதிபதி கடந்த கால ஆட்சியாளர்கள் போன்ற சாத்தான் வேதம் ஓதுகின்றார் என தெரிவித்தார்.



- எஸ்.ஆர்.லெம்பேட் (28-08-2025)

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பெருவிழா

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

வடமாகாண கல்வி அமைச்சின்,பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டச் செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை யும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பெருவிழா 28ம் திகதி அன்று வியாழன் காலை 9.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

காலை 9.30 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தடி இல் இருந்து விருந்தினர் வரவேற்பு மற்றும் பண்பாட்டுப் பேரணி ஆரம்பமானது.

சர்வமத தலைவர்கள் முன்னிலையில் - மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கா.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஜ், மன்னார் மாவட்ட மூத்த சட்டத்தரணி எம்.எம்.சபூர் தீன் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன் போது இசை நடன, கலாச்சார பண்பாடுகளை பிரதி பலிக்கும் நிகழ்வுகள் பிரதான பாலத்தில் இருந்து மன்னார் நகர சபை மண்டபம் வரை ஊர்வலமாக வருகை தந்தனர்.

மன்னார் நகரசபை மண்டபத்தில் விருந்தினர்களுக்கு கும்ப ஆர்த்தி எடுக்கப் பட்டதோடு,தமிழ் தாய்க்கு மாலை அணிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமானது. பல்வேறு நிகழ்வுகள் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய பிரதேசச் செயலகங்கள் ஊடாக அரங்கேற்றப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மன்னெழில் 3 நூல் விருந்தினர் களினால் வைபவ ரீதியாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்ற பட்டதோடு, மன்னார், நானாட்டான்,முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேசச் செயலாளர்கள் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் திணைக்கள அதிகாரிகள், பணியாளர்கள், கலைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# மன்னாரில் 26 வது நாளாக தொடரும் போராட்டம்

## விடத்தல் தீவு மாதர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆதரவு

- எஸ்.ஆர்.லெம்பேட் (28-08-2025)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் 28 அன்றைய தினம் வியாழன் 26 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விடத்தல் தீவு மாதர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆதரவை வழங்கியுள்ளனர்.



மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகின்ற போராட்டம் அன்றைய தினம் (28) வியாழன் 26 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் விடத்தல் தீவு மாதர் சங்க பிரதிநி-திகள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.




போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் ஐ.நா செல்கின்றது "நீதியின் ஓலம்" என்கிறார் வடக்கின் இணைப்பாளர் ஜெயசித்திரா!

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் ஐ.நா செல்கின்றது "நீதியின் ஓலம்" என தாயகச் செயலணி அமைப்பின் வடக்கின் இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்துள்ளார்.

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் "நீதியின் ஓலம்" ஐ.நா. வுக்கு செல்லவுள்ளதாக தாயகச் செயலணி அமைப்பின் வடக்கிற்கான இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்துள்ளார்.

ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து "நீதியின் ஓலம்" கையொப்பப் போராட்டம் கடந்த 23.08.2025 சனிக்கிழமை வடக்கு கிழக்கில் ஆரம்பமானது.

குறிப்பாக இப்போரட்டத்தின் பிரதான நிகழ்வு மனிதப் படுகொலையின் புதைகுழிச் சாட்சியான யாழ்ப்பாணத்தின் செம்மணியில் ஆரம்பமாகி 28ம் திகதியன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் நிறைவுற்றது.




தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுதுத்தி கஅந்த 5 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட நீதியின் ஓலம்" எனும், கையொபபப் போராட்டம் இன்றுடன் நிறைவுக்கு வந்தது.




குறித்த போராட்டத்தில் வடக்கு கிழக்கின் பல்வேறு பிரதேசங்களில் மக்களின் கையொப்பங்கள் சேகரிக்கப்படன.

எழுமாத்றாக பெறப்பட குறித்த கையொப்ப போராட்டத்தில் சுமார் 130 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கையொப்பமிட்டிருந்தனர் என்றும் தெரிவித்தார்.

முன்பதாக கடந்த ஐந்து நாட்களாக தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்பட்ட இந்த கையொப்பப் போராட்டத்தி ஊடாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதிவிசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும் எனவும் இந்த போராட்டம் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1161

# ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் திருகோணமலை

*“ வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காகச்- செய்ய*
*சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல் மாலை*
*இடராழி நீங்குகவே என்று. ”*

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம், ஆவணி மாதத்தில் கும்பாபி'ேகம் நடைபெற்ற தினத்தை முதல் நாளாகக் கொண்டு, பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். வைகாசித் திருவோணத்தில், கம்சன் கதை படிக்கப்பட்டு கிரு'்ணபரமாத்மாவிற்கு உற்சவம் நடைபெறும். வைகாசித் திருவோணத்தை கிரு'்ண பரமாத்மாவின் அவதார தின விழாவாகவும், அதனையடத்துவரும் ஐந்தாம் நாள் ருக்மணி கல்யாண நாள் விழாவாகவும், ஆறாம் நாள் கம்சன் கதை விழாவாகவும், ஏழாம் நாள் வாணாசுரன் போராகவும், பத்தாம்நாள் சத்தியபாமா கல்யாண விழாவாகவும் அலங்கார உற்சவம் நடைபெறும்.

ஆவணிமாத ஜென்ம அஷ்டமியன்று உறியடிவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் பல சிறப்பு விழாக்கள் கொண்டாடப்படுவது வழக்கம். புரட்டாதிச் சனிவாரத்தில் பெருந் திரளான மக்கள் இவ்வாலயத்தில் கூடுவது வழக்கம். கார்த்திகை விளக்கீட்டன்றும், இரவில் விசேட திருவிழாவும், மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழாவும், திருப்பாவை விழாவும், ஒவ்வொரு ஏகாதசியிலும் சிறப்பான திருவிழாவும், இவ்வாலயத்தில் வழமையாக நடைபெறும் விழாக்களாகக் காணப்படுகின்றன.

திருமால் மும்மூர்த்திகளிலே காக்குங் கடவுளாக விளங்குகின்றார். திருமாலை வி'்ணு என்றும் கூறுவர். உலகத்து உயிர்களைக் காக்கும் கடவுள் இவராதலின், அவ்வப்போது உலகத்தில் மனிதரைப்போலத் தோன்றுவார். வாழும் மனிதருள் தகுந்த ஒருவரிடம் தமது சக்தியைச் சிறிதளவு கொடுத்து அவரைக் கொண்டு பல காரியங்களை நடத்திச் செல்வார். இவ்வாறானவர்களைத் தெய்வ அருள் பெற்றவர்கள் என்று அழைக்கின்றோம். தாமே மானிட வடிவந் தாங்கி மண்ணுலகிற்கு இறங்கி வருவதையே அவதாரம் என்று அழைப்பது வழக்கம். திருமால் பத்து அவதாரங்களை எடுத்துள்ளார் பத்து அவதாரங்களும் அநீதியைக் கொன்று நீதியை, தர்மத்தை நிலைநாட்ட எடுத்த அவதாரங்களாகவே கருத வேண்டும்.

திருமால் இரணியாக்கனை அழிக்க எடுத்த அவதாரம் வராக அவதாரம். இரணியகசிபுவை அழிக்க எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரம். அசுரர்களை அடக்கி தேவர்கள் அமிர்தம் பெற எடுத்த அவதாரம் கூர்ம அவதாரம், அசுரனாகிய மகாபலியை அழிக்க எடுத்த அவதாரம் வாமனஅவதாரம், ஹயக்கிரீவனை அழித்து வேதங்களைக் காப்பாற்ற எடுத்த அவதாரம் மச்சாவதாரம். அரசகுலத்தினர் மக்களைத் துன்புறுத்தியபோது, ஆதனைத் தடுக்க எடுத்த அவதாரம் பரசுராம அவதாரம். இராவணனைக் கொன்று நல்லோர்களைக் காக்க எடுத்த அவதாரம் இராமவதாரம். கம்சனைக் கொல்லவும், பஞ்சபாண்டவருக்குத் துணையாயிருக்கவும் கிரு'்ணஅவதாரம் எடுத்தார். திருமாலின் அவதாரமாகப் புத்த அவதாரமும் கொள்ளப்படுகிறது. இதனைப் பலராம அவதாரம் எனவும் கூறுவர். கலியுகமுடிவில் உலகத்தை ஆளுபவர்கள் அளவிடமுடியாத அக்கிரமங்களையும் அநியாயங்களையும் செய்யும்பொழுது திருமால், கல்கி அவதாரம் எடுப்பார். இந்த அவதாரத்தின்போது தீயவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவார் எனவும் கூறப்பட்டுள்ளது.

அனைத்து அவதாரங்களுள்ளும் கண்ணன் அவதாரமும், இராமாவதாரமும் ஆழ்வார்களை மிக வசீகரித்த அவதாரமாகக் கருதப்படுகின்றது. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும், ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவும் கண்டனர். தற்காலத்தில் இவ்வாலயம் பல்வேறு புனருத்தாரணப்பணிகளோடு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இவ்வாறான பல சிறப்புக்கள் பொருந்திய கிரு'்ண அவதாரத்தினைத் தெய்வமாகப் போற்றி வணங்கும் மரபின் வெளிப்பாடாகத் திருகோணமலையில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயம் காணப்படுகின்றது.

வளரும்...






20th Successful Anniversary of Canada's Kalaa Brama Academy of Music
Guru and Founder Shrimathi Sugalya Kalaichelvan

கனடிய செய்திகள் Canadian News

## கனடா – கலா பிரம்ம இசைக் கல்லூரியின் வெற்றிகரமான 20வது ஆண்டு நிறைவு விழா ஒரு "யூனியர்" இசை விழாவாக இடம்பெற்றது

கனடா வாழ் பிரபல கர்நாடக மற்றும் மெல்லிசைப் பாடகராகவும் சிறந்த பயிற்றுவிப்பாளருமான திருமதி. சுகல்யா கலைச்செல்வன் அவர்களைக் குருவாகவும் நிறுவனராகவும் கொண்டு இயங்கிவரும் கனடா - கலா பிரம்ம இசைக் கல்லூரியின் வெற்றிகரமான 20வது ஆண்டு நிறைவு விழா ஒரு “யூனியர்” இசை விழாவாக கடந்த வாரம் இடம்பெற்றது.

23-08-2025 சனிக்கிழமையன்று கனடாவின் தோர்ன்ஹில் நகரில் உள்ள மண்டபத்தில் நடைபெற்ற இந்த அழகிய இசை விழாவில் கனடா - கலா பிரம்ம இசைக் கல்லூரியின் அதன் மாணவ மாணவிகள் மேடையில் சமர்ப்பித்த அனைத்து இசை நிகழ்ச்சிகளும் ஒரு “குட்டி” இசைவிழாவை நாம் அனைவரும் ரசித்தது போன்ற உணர்வை அனைவருக்கும் ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது.

மேற்படி கனடா - கலா பிரம்ம இசைக் கல்லூரியின் வெற்றிகரமான 20வது ஆண்டு நிறைவு விழா பிரபல வயலின் மற்றும் வீணை இசைக் கலைஞர் ரி.என். பாலமுரளி அவர்களும் சிறப்பு விருந்தினராக சங்கீத ஆசிரியை திருமதி. குலநாயகி விவேகானந்தனும் கலந்து சிறப்பித்தனர்.

மெல்லிசைப் பாடகராகவும் சிறந்த பயிற்றுவிப்பாளருமான திருமதி. சுகல்யா கலைச்செல்வன் அவர்களும் தனது ஆற்றலை வெளிக்காட்டும் வகையில் சிறந்த பக்கவாத்திய கலைஞர்களோடு இணைந்து தனியான இசைக் கச்சேரி ஒன்றையும் எமக்கு அளித்தது ஒரு “பேரின்பம்” ஆகும்.

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று அன்றைய கனடா - கலா பிரம்ம இசைக் கல்லூரியின் வெற்றிகரமான 20வது ஆண்டு நிறைவு விழா ஒரு இசைவிழா ரசிகர்களுக்கு தரும் இசையின்பத்தை தந்தது என்பதே விழாவிற்கு இசைவான விமர்சனம் என்பது உண்மை.!

- Sathiyan







# இவ்வார ராசிபலன்

**29-08-2025 வெள்ளி தொடக்கம் 04-09-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** ஆசைகள் நிறைவேறும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரண பொருள் களவுப்போகும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கை நிறைவேறும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதார சிறப்பு தரும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பாதாள பைரவர், அதிர்ஷ்ட எண்: 4,1,8,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**ரிஷபம்:** சந்தோஷமான நிகழ்வு அமையும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்ட காலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உறவினர் வருகை உண்டு. உற்சாகம் கலை கட்டும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். கையிருப்பு கரையும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணங்கள் உதயமாகும். பழையக் கடன் ஒழியும். வருமானத் தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்தநிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச்செலவு ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. சிந்தனை வளர்க்கப்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டு சிந்தனைகள் மேலோங்கும். புதியப்பொருள் சேரும். அந்நிய தேச பயணம் உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீர விநாயகர், அதிர்ஷ் எண்: 5,1,7,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T




**மிதுனம்:** நற்காரியம் எதிர்பார்த்தபடி நடக்கும். பணியில் கவனம் தேவை. பொது வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். தேகப்பலம் கூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. செயல்பாட்டின் தீவிரம் கூடும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். மனக்குழப்பங்கள் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக்காரியம் ஜெயமாகும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். கர்மவினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்:1,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: காவி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P




**கடகம்:** பணிவான பேச்சு அவசியம். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தன வரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். மனைவியால் மதிப்பு உயரும். பிள்ளைகளால் பெருமை கூடும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் திரும்ப கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பொன், பொருள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தொல்லை தருகிறவர் விலகிடுவர். வயிற்று உபாதை வந்து சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சீரான வாழ்வு அமையும். சுபவிரயம் ஏற்படும். பயணத்தால் பலன் உண்டு. வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்பு பெருகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வியாபாரம் விருத்தியாகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 5,4,1,0
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,X



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** சாதகமான சூழ்நிலை ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். மனை வாங்கும் ஆலோசனை பூர்த்தியாகும். தொழில்வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். பிள்ளைகளால் பெருமை சேரும். வங்கி சேமிப்பு உயரும். வயிற்று உபாதை வந்து சேரும். மாற்று இன நட்பு பெருகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழில் குழப்பங்கள் நீங்கும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். தனலாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப்பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். தேவைகள் பூர்த்தியாகும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 6,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J.P




**கன்னி:** தேவைகள் பூர்த்தியாகும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக்கடன் தீரும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். காரியங்கள் கைக்கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்வி செலவு அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். குதூகலம் தாண்டவமாகும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரியபகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,V




**துலாம்:** உடல்நலத்தில் ஷேமம் கிடைக்கும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். திடீர் பயணம் உண்டு. முதுகில் வலி வந்து நீங்கும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மன பயம் ஏற்படும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புக்கள் கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். மனோ தைரியம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புத்திரர்களால் மேன்மை உண்டு. சுபச்செய்தி வரும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பணிவான பேச்சு அவசியம். விவசாயம் பலன் தரும். நண்பர்களால் உதவி உண்டு. பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். மனநிம்மதி தரும். இனிய தகவல் வந்து சேரும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இன்னல்கள் அகலும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 9,2,1,6
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**விருச்சிகம்:** பணவரவு அதிகரிக்கும். வறுமைகள் அகலும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு குறையும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். கமி'ன் தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். வேலை பளு குறையும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். புதிய எண்ணம் உருவாகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். பழைய பாக்கி வசூலாகும். சாதகமான சூழ்நிலை உருவாகும். வழக்குகள் வெற்றியை தரும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். வரவுகளால் திருப்தி உண்டு.

(தொடர்ச்சி 22 பக்கம்)

உலக செய்திகள் World News

# வரி விதிப்பு விவகாரத்தில் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்க வேண்டும் — கெஜ்ரிவால்



அமெரிக்க இறக்குமதி பொருட்களுக்கு 100 சதவீத வரியை இந்தியா விதிக்க வேண்டும் என்று கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 25 சதவீத கூடுதல் வரி விதிப்பு நேற்று முதல் அமலுக்கு வந்தது. ஏற்கெனவே விதித்த 25 சதவீத வரியோடு இந்த கூடுதல் 25 சதவீதமும் சேர்ந்துள்ள நிலையில், 50 சதவீத வரி விதிப்பு இந்தியாவின் ஏற்றுமதியை கடுமையாக பாதிக்கும். இதனால், தொழிலாளர் சார்ந்த துறைகளின் ஏற்றுமதி 70 சதவீதம் அளவுக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா வரி விதிப்பால் கடுமையான பாதிப்புகள் ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், மாற்று வழியை மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் வரி விதிப்பு விவகாரத்தில் அமெரிக்காவிற்கு இந்தியா பதிலடி கொடுக்க வேண்டும் என்று அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார். டில்லி முன்னாள் முதலமைச்சரும் ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் இது தொடர்பாக கூறியதாவது: "வரி விதிப்பு விவகாரத்தில் மத்திய அரசிடம் இருந்து உடனடி பதில் எதுவும் இல்லை. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தி பொருட்களுக்கான 11 சதவீத வரியை தள்ளுபடி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது உள்ளூர் வணிகத்தை கடுமையாக பாதிக்கும். பிற நாடுகள் அமெரிக்காவிற்கு அடிபணியவில்லை அவர்கள் கூடுதல் வரியை விதித்துள்ளனர். எனவே நாமும் கூடுதல் வரியை விதிக்க வேண்டும். அமெரிக்கா 50 சதவீத வரி விதித்தால், இந்தியா 100 சதவீத வரியை அமெரிக்காவிற்கு விதிக்க வேண்டும். மொத்த நாடும் இந்த முடிவுக்கு ஆதரவாக இருக்கும். எந்தவொரு நாடும் இந்தியாவை புண்படுத்த முடியாது. 140 கோடி மக்களைக் கொண்ட நாடு இந்தியா" என்றார்.

# இந்திய பிரதமர்களுடன் பணியாற்றிய அனுபவம்: புத்தகமாக வெளியிடும் மம்தா பானர்ஜி




மேற்கு வங்க மாநில முதல்வரும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவருமான மம்தா பானர்ஜி, தனக்கு பல பிரதமர்களுடன் நெருங்கி பணியாற்றிய அனுபவம் உள்ளது. அவர்களுடன் பணியாற்றிய அனுபவத்தை புத்தகமாக எழுதி வெளியிட இருக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். மேற்கு வங்கத்தில் தொடர்ந்து 3 முறை ஆட்சியை பிடித்து முதல்வராக இருக்கும் மம்தா பானர்ஜி இது தொடர்பாக கூறியதாவது: நான் பல பிரதமர்களை அருகில் இருந்து பார்த்துள்ளேன். தற்போது, யார் யார் உண்மையில் எப்படிப்பட்டவர்கள் என்பது குறித்து புத்தகம் எழுதப்போகிறேன். அடுத்த வருடம் நடைபெறும் புத்தக திருவிழாவில் இந்த புத்தகம் வெளியிடப்படும். நான் மத்திய அமைச்சராக எட்டு முறை இருந்துள்ளேன். ரெயில்வேத்துறை, நிலக்கரி, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறைகளை கையாண்டுள்ளேன். நான் என்ன பார்த்தேன். எப்படி பார்த்தேன் என்பதை எழுதுவேன். இவ்வாறு மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

# டூரிஸ்ட் ஃபேமிலி இயக்குநர் அபிஷன் கதாநாயகனாக அறிமுகம்



அபிஷன் ஜீவிந்த் இயக்கத்தில் சில மாதங்களுக்கு முன் சசிகுமார் மற்றும் சிம்ரன் நடிப்பில் டூரிஸ்ட் ஃபேமிலி திரைப்படம் வெளியானது. இப்படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்று வெற்றி திரைப்படமாக உருமாறியது. இதனை தொடர்ந்து அபிஷன் அடுத்ததாக கதாநாயகன் அவதாரத்தை எடுத்துள்ளார். சியான் பிலிம்ஸ் & எம்ஆர்பி எண்டெயின்ட்மென்ட் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் புதிய படத்தில் "டூரிஸ்ட் ஃபேமிலி" இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் கதாநாயகனாக அறிமுகமாகிறார். அபிஷன் ஜீவிந்துக்கு ஜோடியாக அனஸ்வரா ராஜன் உள்ளிட்டோர் நடிக்கும் புதிய படத்தை மதன் இயக்குகிறார். இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைக்கிறார். இந்நிலையில் இப்படத்தின் படபூஜை விழா நடைப்பெற்றது.

# மம்மூட்டி நடித்த ஹகளம்காவல் படத்தின் முன்னோட்டம் வெளியீடு



மம்மூட்டி நடிப்பில் சில மாதங்களுக்கு முன் வெளியான டொமினிக் அண்ட் தி லேடீஸ் பர்ஸ் மற்றும் பசூக்கா திரைப்படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. அதை தொடர்ந்து மம்மூட்டி சில உடல்நிலை காரணங்களால் 7 மாத காலம் சிகிச்சையில் இருந்து சமீபத்தில் உடல்நிலை சரியாகி கம்பேக் கொடுத்துள்ளார். மம்மூட்டியின் அடுத்த திரைப்படமான களம்காவல் படத்தை குரூப், ஓஷானா படங்களுக்குக் கதை எழுதிய ஜித்தின் கே ஜோஷ் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். இந்த படத்தில் விநாயகன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இதுவரை பார்த்திராத கதாபாத்திரத்தில் மம்மூட்டி நடித்துள்ளார். படத்தின் முன்னோட்டம் படக்குழு வெளியிட்டுள்ளது. ஒரு வில்லத்தனமான சிரிப்பு காட்சி இடம்பெற்றுள்ளது. படத்தின் முன்னோட்ட காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது. படத்தின் இசையை முஜீப் மஜீத் மேற்கொண்டுள்ளார்.

# ரஷ்ய அதிபர் புட்டின், கிம் ஜாங் உன் உள்பட 26 வெளிநாட்டு தலைவர்கள் அடுத்த வாரம் சீனாவுக்கு பயணம்



சீனாவில் நடைபெற உள்ள வெற்றி தினப் பேரணி நிகழ்ச்சியில் ரஷ்ய அதிபர் புதின், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். சீன தலைநகர் பெய்ஜிங்கில் செப்டம்பர் 3-ஆம் தேதி இந்த வெற்றி தினப் பேரணி கொண்டாடப்படுகிறது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானுக்கு எதிராக சீனா வெற்றி பெற்றதன் 80-வது ஆண்டு தினத்தை முன்னிட்டு இந்த கொண்டாட்டம் நடைபெறுகிறது. இந்த பேரணி அணிவகுப்பு நிகழ்ச்சிகளின் போது சீனாவின் நவீன ராணுவ வலிமையை பறைசாற்றும் வகையில், அதிநவீன ஆயுதங்களின் அணிவகுப்பும் நடத்தப்பட உள்ளது. இந்த விழாவில் 26 உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுவதாகவும், ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினும், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் உள்ளிட்டோரும் கலந்து கொள்வார்கள் என்று சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பெய்ஜிங்கில் உள்ள தியான்மென் சதுக்கத்தில் நடைபெறும் அணிவகுப்பை மேற்குலக நாடுகளும், சர்வதேச நோக்கர்களும் உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள். அமெரிக்காவின் வரி யுத்தத்திற்கு நடுவே, சீனாவில் 26 நாடுகளின் தலைவர்கள் ஒன்றாக கூடுவது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# டிரம்ப் மீது அமெரிக்க மத்திய வங்கி ஆளுனர் வழக்கு தொடர முடிவு

அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கி ஆளுனர் லிசா குக்கை பதவியில் இருந்து அதிபர் டிரம்ப் அதிரடியாக நீக்கி உத்தரவிட்டார். லிசா மீது பல்வேறு குற்றச்சாட்டு இருப்பதால் அவரை பதவி நீக்கம் செய்ததாக டிரம்ப் தெரிவித்தார். இந்த நிலையில் தன்னை பதவி நீக்கம் செய்ததை எதிர்த்து டிரம்ப் நிர்வாகத்தின் மீது வழக்கு தொடர போவதாக லிசா குக் தெரிவித்து உள்ளார். இதுதொடர்பாக லிசாவின் வக்கீல் அபே லோவெல் கூறும்போது, மத்திய வங்கி ஆளுநர் லிசா குக்கை நீக்க அதிபர் டிரம்பிற்கு அதிகாரம் இல்லை. ஒரு பரிந்துரை கடிதத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவரை நீக்க டிரம்ப் மேற்கொண்ட முயற்சியில் எந்த சட்ட அடிப்படையும் இல்லை. இந்த சட்டவிரோத நடவடிக்கையை எதிர்த்து நாங்கள் வழக்குத் தாக்கல் செய்வோம் என்றார்.

# அமெரிக்கா: கல்லூரி தேவாலய வளாகத்தில் துப்பாக்கி சூடு — இருவர் உயிரிழப்பு



அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்தில் உள்ள மினியபோலிஸ் கத்தோலிக்க பள்ளியில் இன்று காலை மாணவர்களுக்கான வழக்கமான பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. அப்போது பள்ளி வளாகத்திற்குள் துப்பாக்கியுடன் புகுந்த நபர், அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினார். இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் அலறியடித்துக் கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்த தாக்குதல் சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்த நிலையில், 20-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறை, துப்பாக்கி சூடு நடத்திய நபரை சுட்டுக் கொன்றனர். படுகாயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில், "மின்னசோட்டாவில் பள்ளி வளாகத்தில் ஒரு சோகமான துப்பாக்கி சூடு சம்பவம் நிகழ்ந்துள்ளது. எப்.பி.ஐ. அதிகாரிகள் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்" என்று பதிவிட்டுள்ளார்.

# தென்கொரியாவில் பள்ளியில் மாணவர்கள் செல்போன் பயன்படுத்த தடை

தென்கொரியாவில் பள்ளி மாணவ - மாணவிகளிடையே செல்போன் பயன்பாடு அதிகரித்து வந்தது. இதனால் பாலியல் குற்றச்சம்பவங்கள், போதைப்பொருள் பயன்பாடு, ஆன்லைன் கேமிங் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களில் மாணவர்கள் சிக்கி அவர்களின் வாழ்க்கை சீரழிவதாக புகார் எழுந்தது. இந்தநிலையில் பள்ளியில் மாணவ - மாணவிகள் செல்போன் பயன்பாட்டுக்கு நிரந்தர தடை விதிக்க வேண்டும் என பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் தென்கொரிய அதிபர் மூன் ஜே இங் பள்ளியில் மாணவர்கள் செல்போன் பயன்படுத்த தடை விதிப்பதற்கான மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்தார். இந்த மசோதாவுக்கு ஆளுங்கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.கள் ஆதரவு தெரிவித்தனர். இதனால் தென்கொரியாவில் அடுத்த கல்வியாண்டு முதல் (மார்ச் 2026) பள்ளியில் மாணவர்கள் செல்போன் பயன்படுத்த அனுமதி இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வேலணை வயல்வெளிகளை தீ மூட்டும் விசமிகள் – மக்களுடன் கால்நடைகளும் பறவைகளும் பாதிப்பு



மண்கும்பான் பிள்ளையார் கோயில் சுற்றுப்புறத்தில் இருக்கும் வயல் காணிகளில் காணப்பட்ட புதர்களுக்கு விசமிகள் தீ மூட்டியதால் புற்கள் சுடர்விட்டு பற்றி எரிந்து வீதியால் மக்கள் செல்லமுடியாத நிலை உருவாகியுள்ளதுடன் கால்நடைகளும் பெரும் அசௌகரியங்களை சந்தித்துள்ளன.

இது தொடர்பாக பிரதேச சபை தவிசாளருக்கு அறியப்படுத்தியதை அடுத்து துரித நடவடிக்கை மேற்கொண்டதன் பிரகாரம் யாழ் மாநகர சபையின் தீயணைப்பி வாகனம் குதித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு பிரதேச சபை உறுப்பினர்களான அனுசியா ஜெயகாந்த், சுவமினாதன் பிரகலாதன், கருணாகரன் நாவலன், செந்தமிழ்ச் செல்வன் கேதீஸ்வரன் ஆகியோர் நேரில் சென்று தீப் பரவலை கட்டுப்படுத்தும் துறைசார் அதிகாரிகளுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

வீசும் கடும் காற்றுக் காரணமாக பெரும் சுடர்விடு எரிந்த தீயை தீயணைப்பு படையினர் பலமணி நேரம் போராடிய கட்டுப்படுத்தினர்.

இதேநேரம் அல்லைப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலை பகுதியில் இருந்து

## கட்டுப்படுத்த முடியாது திணறும் அதிகாரிகள்!

அராலிச் சந்தி வரைதான பல கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வயல் வெளிகளில் உள்ள புற்களுக்கு வருடவருடம் விசமிகள் தீமூட்டி வருவதும் அதை அணைப்பதும் தொடர்கதையாகி இருக்கின்ற நிலையில் குறித்த சட்டவிரோத செயலைச் செய்யும் விசமிகள் மீது நடவடிக்கை எடுக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாது பிரதேசத்தின் அதிகாரிகள் திணறிவருகின்றனர்.

பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள குறித்த பகுதிக்கு பருவ காலங்களில் வெளி நாடுப் பறவைகள் அதிகளவில் வருகை தரும் அவை தமது இனப்பெருக்கங்களை செய்வதும் வழமை.

இவ்வாறு தீ வைக்கப்படுவதால் பறவைகள் சரணாலயமும் கேள்விக்குறியாக்கியுள்ளது.



இதேநேரம் இவ்வாறு தொடர்ச்சியாக புற்றரைகள் தீவைக்கப்படுவதால் அந்த புற்களை உணவாக கொள்ளும் கால்நடைகளும் உணவின்றி குடிமனைகளுக்கு செல்லும் நிலையும் அதனால் கட்டாக்காலி தொல்லை என பிரச்சினைகள் உருவாகி மக்களுக்கும் அதிகாதிகளுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# இவ்வார ராசிபலன்

( 20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மங்களகரமான காலம். மின்சாரத்தில் சற்று கவனம் தேவை. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். குடும்ப சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விரயம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பெண்களால் பெருமை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,8,9,6
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**தனுசு:** முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக்கடன் வசூலாகும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. தொழில் அபிவிருத்தி ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும். மனதில் சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். திறமையால் பெருமை சேரும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். தோதான எண்ணம் உருவாகும். செல்வாக்கு உயரும். உணவுத்தொழில் உயர்வு பெறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வைத்தீஸ்வர முருகன், அதிர்ஷ்ட எண்: 6,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,Q




**மகரம்:** வேண்டாத நபர் விலகுவர். வியாபாரம் செழிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். வேலைவாய்ப்புகள் தேடி வரும். வேற்றுமனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். ஆரோக்கியம் கூடும். அணிகலன் சேரும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். எதிர்ப்புகள் விலகும். திடீர் பயணம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் வந்து போகும். கால்நடைகளால் நன்மை உண்டு. புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கை உண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. மனதில் உற்சாகம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சியுண்டு. நிதி நிலைமை சீராகும். மெத்தனப் போக்கு மாறும். பொருள் இழப்பு ஏற்படும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். நண்பர்களால் உதவி உண்டு. வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். காதல் கசக்கும். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிலும் விடாமுயற்சி அவசியம். நல்லோர்களின் நட்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 1,5,4,7
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,M




**கும்பம்:** வாயில் தேடி வரவு வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்து சேரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். சுபகாரியம் கைகூடும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய தொழில் முதலீடுகளில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சகோதர வழியில் சகாயம் கிடைக்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கர்ம வினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபெரிய பாளையத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 0,2,6,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




**மீனம்:** பெற்றோர்களின் ஆசி கிட்டும். உறவினர்கள் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். துன்பங்கள் அகலும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். சேமிப்பு வளரும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். நட்பு வட்டம் விரிவடையும். வேண்டும் வரம் கிடைக்கும். நலமே விளையும் இனிய வாரமாகும். புண்ணியம் சேரும். பெயர், புகழ் செல்வாக்கு கௌரவம் உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பண நடமாட்டம் கூடும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். க்'ட காலம் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவாஞ்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,O

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8









26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்






உதயம் 1534 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 29, 2025

# ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் ஐ.நா செல்கின்றது "நீதியின் ஓலம்" என்கிறார் வடக்கின் இணைப்பாளர் ஜெயசித்திரா!

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் ஐ.நா செல்கின்றது "நீதியின் ஓலம்" என தாயகச் செயலணி அமைப்பின் வடக்கின் இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்துள்ளார்.

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் "நீதியின் ஓலம்" ஐ.நா. வுக்கு செல்லவுள்ளதாக தாயகச் செயலணி அமைப்பின் வடக்கிற்கான இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்துள்ளார்.

ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து "நீதியின் ஓலம்" கையொப்பப் போராட்டம் கடந்த 23.08.2025 சனிக்கிழமை வடக்கு கிழக்கில் ஆரம்பமானது.

குறிப்பாக இப்போரட்டத்தின் பிரதான நிகழ்வு மனிதப் படுகொலையின் புதைகுழிச் சாட்சியான யாழ்ப்பாணத்தின் செம்மணியில் ஆரம்பமாகி 28ம் திகதியன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் நிறைவுற்றது.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)





# கனடா — கலா பிரம்ம இசைக் கல்லூரியின் வெற்றிகரமான 20வது ஆண்டு நிறைவு விழா ஒரு "யூனியர்" இசை விழாவாக இடம்பெற்றது

கனடா வாழ் பிரபல கர்நாடக மற்றும் மெல்லிசைப் பாடகராகவும் சிறந்த பயிற்றுவிப்பாளருமான திருமதி சுகல்யா கலைச்செல்வன் அவர்களைக் குருவாகவும் நிறுவனராகவும் கொண்டு இயங்கிவரும் கனடா- கலா பிரம்ம இசைக் கல்லூரியின் வெற்றிகரமான 20வது ஆண்டு நிறைவு விழா ஒரு "யூனியர்" இசை விழாவாக கடந்த வாரம் இடம்பெற்றது.

23-08-2025 சனிக்கிழமையன்று கனடாவின் தோர்ன்ஹில் நகரில் உள்ள மண்டபத்தில் நடைபெற்ற இந்த அழகிய இசை விழாவில் கனடா- கலா பிரம்ம இசைக் கல்லூரியின் அதன் மாணவ மாணவிகள் மேடையில் சமர்ப்பித்த அனைத்து இசை நிகழ்ச்சிகளும் ஒரு "குட்டி" இசைவிழாவை நாம் அனைவரும் ரசித்தது போன்ற உணர்வை அனைவருக்கும் ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# "அயோக்கியன்" ரணில் என்பவனுக்காக அலறும் ஏனைய "அயோக்கிய" அரசியல்வாதிகள்



விடுதலைப்புலிகளுக்குக்கு உணவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் பதுளையை சேர்ந்த காத்தாய் என்ற 69 வயது பெண் 1994ல் கைது செய்யப்பட்டார்.

19 வருடங்களாக அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு ஏற்பட்ட புற்றுநோய் மற்றும் படுக்கை புண்களுக்கு சிகிச்சை வழங்கப்படவில்லை. அதனால் அவர் 2013 இல் சிறையில் பரிதாபகரமாக மரணமானார்.

ஒரு மலையக மூதாட்டிக்கு சிகிச்சை மறுக்கப்பட்டு மரணம் அடைந்தது ஜனநாயக படுகொலையாக மலையக தலைவர்களான மனோ கணேசன், திகா போன்றவர்களுக்கு தெரியவில்லை.



# "ஒப்பரேஷன் மிஸ்டர் கிளீன்" — பழிவாங்கலா ...மிரட்டலா?

*"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ததன் மூலம் அநுர அரசு எதனை சாதிக்கப் பார்க்கின்றது?இந்த கைது அநுர அரசுக்கு சாதமாக அமையுமா பாதகமாக அமையுமா? ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ய வேண்டிய அவசியம் ,அவசரம் அநுர அரசுக்கு ஏன் ஏற்பட்டது?" ---- கே.பாலா*

இலங்கையில் 1993 மே 17முதல் 2022 ஜூலை 22 வரையிலான காலப்பகுதியில் 6 தடவைகள் பிரதமராகவும் 20 ஜூலை 2022 முதல் 22 செப்டெம்பர் 2024 வரை ஜனாதிபதியாகவும் பதவிவகித்த ""மிஸ்டர் கிளீன்""என சிங்களவர்களினாலும் ""அரசியல் நரி""என தமிழர்களினாலும் இலங்கையின் முதல்தர, பிரபல்யம் மிக்க அரசியல் தலைவராக சர்வதேசத்தினாலும் அழைக்கப்பட்டு வந்த ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி.-என்.பி.பி .அரசினால் கைது செய்யப்பட்டமை இலங்கையில் அரசியல் சுனாமியை ஏற்படுத்தி விட்டுள்ளது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# கைதுசெய்யப்பட்ட ரணிலும்: அதன் விளைவுகளும்!

**யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்!**



நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணை எடுத்த ஒருவருக்கு இப்பொழுது பிணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற பொருள்பட ஓர் அரசியல் செயற்பாட்டாளர் முகநூலில் பதிந்திருந்தார். ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டார் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் உண்டு. ரணில் விக்கிரமசிங்க ஒரு லிபரல் என்று கூறப்படுவதை பெரும்பாலான தமிழர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவர் லிபரல் முகமூடி அணிந்த ஒரு இனவாதி என்றுதான் தமிழர்கள் நம்புகிறார்கள். அவரை அன்ரன் பாலசிங்கம் நரி என்று சொன்னார். பாலசிங்கம் சொன்ன பல விடயங்களை தமிழர்கள் மறந்து விட்டார்கள். ஆனால் ரணிலைப்பற்றி அவர் சொன்னதை மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)